# சுதந்திரன்

SUTANTIRAN

விலை சதம் 25. தொலைபேசி: 23411

திருவள்ளுவர் ஆண்டு 2003, மாசி 29உ (12-3-72) ஞாயிறு 1391 முஹறம் 25 புத்தகம் 25 இதழ் 16


## ஐயோ ராஜா!

மலைநாட்டில் யாரோ அரசாங்கத்துக்கு கூஜா தூக்கும் ராஜா ஒருவர்—சமசமாஜக் கட்சி தொண்டராளர்—தமிழனை புதைகுழியில் வைக்கப் புதிய அரசியல் சட்டம் தயாரிக்கும் கொல்வின் மாத்தயாவின் கூட்டத்தினர் ஒருவர் சமீபத்தில் தமிழக முதலமைச்சர் கருணாநிதி அவர்களுக்கு இலங்கைத் தமிழரசுக்கட்சியை தாக்கி ஒரு கடிதம் எழுதினாராம் — பாவம் தமிழரசுக்கட்சியின் வரலாற்றை கடந்த இருபது ஆண்டுகளாக நன்கறிந்த தமிழக முதல்வர் இந்த ராஜாவின் கடிதத்தை ஆத்திரத்தோடு கசக்கிக் குப்பைக்கூடைக்குள் போட்டாராம். ஐயோ ராஜா!

## மட்டக்களப்பு மாநகரசபையை யாழ். மாநகரசபை பின்பற்றுமா?

மட்டக்களப்பில் இப்போது ஒரு புதிய சூடு பிடித்திருக்கிறது: புதிய அரசியல் சட்டத்தை எதிர்த்து மட்டக்களப்பு நாடாளுமன்ற உறுப்பினர் திரு. செ. இராசதுரை, கல்குடா நாடாளுமன்ற உறுப்பினர் திரு. கே. டபிள்யு. தேவநாயகம், அறப்போரணித் தலைவர் அரியநாயகம், வழக்கறிஞர் திரு. ஆ. தவராசா, திரு. அரியரெத்தினம் ஆகியோர் தீவிர போர் முழக்கம் செய்துள்ளதைத் தொடர்ந்து மட்டக்களப்பு மாநகரசபையும் புதிய அரசியல் சட்டத்தை எதிர்த்து தீர்மானம் ஒன்றை நிறைவேற்ற இருக்கிறது;

'தமிழர்களுக்கும் தமிழ் மொழிக்கும் ஊறு செய்யும் புதிய அரசியல் சட்டத்தை மட்டக்களப்பு மாநகரசபை எதிர்க்கிறது' என்று ஒரு தீர்மானத்தை கொண்டு வர மாநகரசபை உறுப்பினரான திரு. எப். ஜி. ஜெபசிங்கம் முன்னறிவித்தல் கொடுத்திருக்கிறார். 'மட்டக்களப்பு மாநகரசபையின் இந்த முன்மாதிரியை யாழ்ப்பாண மாநகரசபை பின்பற்ற வேண்டும்' என்றும் ஒரு மட்டுநகர் மாநகரசபை உறுப்பினர் கருத்துத் தெரிவித்தார்;

## சோஷலிசமாம் சோஷலிசம்...!

1970ஆம் ஆண்டுக்கு முன்பு முதலாளித்துவ யூ. என். பி. ஆட்சியின் கீழும் — இன்று சோசலிச கூட்டாட்சியின் கீழும் உள்ள விலைவாசி — வாழ்க்கைச் செலவு விபரம்:-

| | யூ. என். பீ. ஆட்சியில் (1969) | | சோசலிச கூட்டாட்சியில் (1972) | |
|---|---|---|---|---|
| | ரூ. | ச. | ரூ. | ச. |
| அரிசி (கொத்து) | | 85 | 1 | 60 |
| சீனி (ருத்தல்) | | 72 | 1 | 50 |
| தேயிலை (ருத்தல்) | 1 | 60 | 2 | 50 |
| பால் (பைந்து) | | 55 | | 80 |
| வெங்காயம் (ருத்தல்) | | 28 | | 54 |
| மிளகாய் (ருத்தல்) | 1 | 60 | 3 | 76 |
| தபால் முத்திரைச் செலவு (குறைந்த கட்டணம்) | | 10 | | 15 |
| அஞ்சலட்டை | | 05 | | 10 |
| டெலிபோனுக்கு (குறைந்த தூரக் கட்டணம்) | | 05 | | 10 |
| புகைவண்டி பயணச் செலவு (கொழும்பில் இருந்து யாழ்ப்பாணத்துக்கு) | 9 | 90 | 10 | 80 |

முதலாளித்துவ ஆட்சி கொடிதுதான் — ஆனால் அதைவிட இந்த முரட்டுப் போலி சோசலிச ஆட்சி மிக மிகக் கொடிதாக அல்லவா இருக்கிறது!

சோசலிசம் பேசும் சூரியரே! வளர்ந்துவரும் ஈழப் பொதுவுடைமை வாழ்வு பற்றி வாய்கிழியக் கத்தும் வாலுப் பேரனே! உங்கள் சோசலிசம் இதுதானா?

# பேசாத பிரதிநிதிகள் பேசுவார்களா?

"முத்தமிழரின் இன்றைய நிலையை நன்கு தெரிந்தும் 'புதிய அரசியல் சட்டத்தை' எதிர்த்து இன்னும் ஒரு வார்த்தை கூடப் பேசாமல் இருக்கும் தமிழ் பேசும் நாடாளுமன்ற உறுப்பினர்களின் மௌனம் கலையாதா?' என்று சாவகச்சேரி நாடாளுமன்ற உறுப்பினர் திரு. வ. ந. நவரெத்தினம் அவர்கள் பொதுக் கூட்டம் ஒன்றில் பேசுகையில் ஏக்கத் தோடு கேட்டார்;

தமிழரசுக்கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர்களும் கல்குடா நாடாளு



மன்ற உறுப்பினர் திரு. கே. டபிள்யு. தேவநாயகம் அவர்களும் புதிய அரசியல் சட்டத்தை எதிர்ப்பதென்று தங்கள் கருத்தை பகிரங்கமாகத் தெரிவித்து விட்டார்கள்:

வட்டுக்கோட்டை நாடாளுமன்ற உறுப்பினர் தியாகராசாவும் நல்லூர் நாடாளுமன்ற உறுப்பினர் அருணாசலமும் மூதூர் நாடாளுமன்ற உறுப்பினர் மஜீத்தும் தாங்கள் புதிய அரசியல் சட்டத்தை ஆதரிப்பதென்று மானம் ரோசம் இன்றி பத்திரிகைகளில் அறிக்கை விட்டும் கூட்டங்களில் பேசியும் வருகிறார்கள்;

ஏனைய தமிழ் பேசும் நாடாளுமன்ற உறுப்பினர்கள் ஏன் புதிய அரசியல் சட்டம் பற்றி இன்னும் கருத்துத் தெரிவிக்காமல் இருக்கிறார்கள் என்பது தான் எனக்கு விளங்கவில்லை." என்று திரு. நவரெத்தினம் கூறினார். அவர் மேலும் கூறியதாவது:—

இது ஒரு சரித்திர முக்கியத்துவம் வாய்ந்த நேரம்; வீரர்களையும் துரோகிகளையும் ஒரு சமுதாயம் அடையாளம் கண்டு கொள்ளும் நேரம்; நிச்சயமாக நாளை ஒரு நாள் வடக்கு கிழக்கு மண்ணில் மக்கள் சுதந்திர வாழ்வு பெற்று வாழும் ஒரு தினம் வரும்போது மாலை சூட்டப்படவேண்டியவர்கள் யார்? மானத் தமிழர்களால் காறி உமிழப்படவேண்டியவர்கள் யார்? என்பதை முன்கூட்டி கணக்கெடுக்கும் நேரம். இந்த நேரத்தில் தமிழினத்தை உண்மையாக நேசிக்கின்ற தமிழ்பேசும் நாடாளுமன்ற உறுப்பினர்கள் துணிந்து புதிய அரசியல் சட்டத்தை எதிர்த்து குரல் கொடுக்க முன்வரவேண்டும்;

கிளிநொச்சித் தொகுதி உறுப்பினர் ஆனந்தசங்கரி, மட்டுநகர் தொகுதி இரண்டாவது உறுப்பினர் ராஜன் செல்வநாயகம், பட்டிருப்புத் தொகுதி உறுப்பினர் தம்பிராஜா, கல்முனைத் தொகுதி உறுப்பினர் அசுமது, நிந்தவூர் தொகுதி உறுப்பினர் முஸ்தபா, பொத்துவில் தொகுதி உறுப்பினர் மஜீத் ஆகியோர் 'புதிய அரசியல் சட்டம்' தமிழருக்கு இழைக்கும் அநீதி பற்றி துணிந்து முழக்கமிட முன்வரவேண்டும்:

வடக்கு கிழக்கு மாகாணங்களில் இஸ்லாமிய தமிழரும் [illegible] இரண்டறக் கலந்து வாழ்ந்துவருகிறோம். ஒற்றையாட்சி அமைப்பு ஒன்றின் கீழ் இஸ்லாமியருக்கு ஒரு மந்திரி பதவி மட்டுமே கிடைக்கும் — வடக்கு — கிழக்கு மாகாணங்களுக்கு என சுயாட்சியோ தனிவாழ்வோ ஏற்படும்போது அவர்களுக்கு ஐந்து அல்லது ஆறு மந்திரி பதவிகள் கிடைக்கும் வாய்ப்பு ஏற்படும் என்பதை ஒவ்வொரு இஸ்லாமியனும் நினைவில் வைத்துக்கொள்ள வேண்டும்.

ஆகவே வடக்கு — கிழக்கு மாகாணங்கள் இணைந்த ஒரு தனித்தமிழ் வாழ்வு காணும் ஈழத் தமிழர்தம் இலட்சியப் பயணத்துக்கு ஊறு செய்யாமல் புதிய அரசியல் சட்டத்தை எதிர்க்கவும் — அரசியல் சாசனத்தில் கையொப்பமிடாமல் இருக்கவும் தமிழ் பேசும் நாடாளுமன்ற உறுப்பினர்கள் முன்வருவார்களா? பேசாது ஊமையாக இருக்கும் பிரதிநிதிகளின் மௌனம் கலையுமா?"

## சிமோலின் மகனுக்கும் சிங்களவர் கைவிரிப்பு!

கொழும்புத் துறைமுக அதிகார சபையினால் அண்மையில் தெரிவுசெய்யப்பட்ட 15 கடலக பயிலுநர் பதவிகளில் தமிழர் ஒருவர் கூடத் தெரிவுசெய்யப்படவில்லை.

இந்தக் கடலக பயிலுநர் தெரிவில் இன்னொரு வேடிக்கையும் நிகழ்ந்திருக்கிறது; என்ன தெரியுமா?

அரசாங்கத்தை மண்டியிட்டு அடிவருடும் சிமோலின் மகனும்கூட இப்பதவிக்கு விண்ணப்பித்திருந்தாராம். சிமோல் தன் மகனுக்காக சிறீமா தொடக்கம் சூரியர்வரை சிரம்தாழ்த்தி—கரம்கூப்பி செய்யக்கூடிய வேலையெல்லாம் செய்து பார்த்தாராம். பாவம்... தமிழ்மொழியையும் தமிழ் இனத்தையும் விற்று துரோகத்தனமாக நடந்துகூட இந்த அரசாங்கம் வழுப்பு வாதக் கண்ணோட்டத்துடன் சிமோலின் மகனைக்கூடத் தட்டிவிட்டதாம். இப்போது சிமோல் ஒப்பாரி வைக்கத் தொடங்கிவிட்டதாகக் கேள்வி

## வாங்கப் போகிறார் வாத்தி விசுவநாதன்!

தமிழ்பேசும் இனத்தின் விடுதலை வேட்கைக்கு மாறாக— உரிமைக்குரலுக்கு எதிராக— உணர்ச்சிக்கு விரோதமாக — தமிழ் மக்களிடையே பிரசாரம் செய்ய வாத்தி விசுவநாதன் தலைமையில் யாழ்ப்பாணம் சமசமாஜக் கட்சிக் கிளை முடிவு செய்திருக்கிறதாம்;

இப்படிச்செய்வதன் மூலம் அரசாங்கத்திடமிருந்து கௌரவத்தையும் — பதவிகளையும் வாங்க விசுவநாதன் கனவு காண்கிறார். இவர் இறுதியில் தமிழ்பேசும் மக்களிடமிருந்து அவமானத்தையும்—இன்டலையும்— இன்னும் எதை எதையோ எல்லாம்தான் வாங்கப்போகிறார் என்பதை அவருக்கு முன்கூட்டியே மரியாதையாகச் சொல்லிவைக்க விரும்புகிறோம்;

பெரிய அளவு அரசியல் ஒன்றும் விசுவநாதனுக்கு தெரிந்திருக்க எந்த நியாயமும் இல்லை என்றாலும்— தமிழ் இனத்தின் நாடியைப் பிடித்துப் பார்த்து அரசியல் செய்யும் அளவுக்காவது அவருக்கு ஞானம் இருக்கவேண்டும். பாவம்—அதுகூட அவரிடம் இல்லாமல் போனது அவருடைய துரதிர்ஷ்டமே!

வாத்தியார் ஐயாவுக்கு ஒன்றைச் சொல்லிவைக்க விரும்புகிறோம்... "வாயை மூடிக்கொண்டிருங்கள். தமிழருக்கு துன்பம் நிகழும் நேரத்தில் எல்லாம் கொம்டாவி விட்டுக்கொண்டிருக்கும் நீங்கள் வேண்டுமானால் கொட்டாவி விடுவதற்குமட்டும் வாயைத் திறக்கலாம்—மற்றப்படி வாயை மூடிக்கொண்டிருங்கள்." உங்கள் நன்மைக்கே இப்படிச் சொல்கிறோம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தினபதியாருக்குத் தீக்கக்கும் ஒரு கடிதம்!

அறிவு அரசோச்ச வேண்டிய அத்தாணி மண்டபம் அரட்டை அடிக்கும் அப்பளக் கச்சேரியாகவும், அறிவுக் கதிர்களைப் பரப்ப வேண்டிய தினபதி அஞ்ஞான இருளைத் திணிக்கும் அமாவாசை உடுபதியாகவும் விளங்குகின்றன. "தினபதியாரே! இறிது கண் திறந்து பாரப்பா உன் அருளின்றி ஈழம் வாழ் தமிழ் மக்களுக்கு வாழ்வேது? எங்கள் குறைகளைக் களைந்து இன்பம் பெற வழி உண்டா? ஐயனே! பிரானே! கேட்பாயோ எங்கள் குரலை! ஏற்பாயோ எமது இன்னலை! பார்ப்பாயோ பாவித் தமிழரின் பரிதவிப்பை!" ஆபத் சகாயனாகிய உன்னைக் காக்கை வன்னியன் என்றுனே தமிழன்னை பெற்ற தவக்கொழுந்து. அறிவை அறிந்த அறிவொளியாம் தங்களை எட்டப்பன் என்றுனே எழில்மிக்க காளை ஒருவன். அவர்களெல்லாம் நல்லவர்கள் — உத்தமர்கள் — உயர்ந்தவர்கள்;

ஏன்? எப்படி? என்றெல்லாம் கேள்வி கேட்கத் தோன்றுகிறதா? கேளுங்கள்; பத்திரிகை ஆசிரியராகி விட்டால் தான் பிறந்த இடம், தன் உயர்வுக்காகப் பாடுபட்ட நண்பர்கள், தன் பெருமைக்கும் புகழுக்கும் உறுதுணையாக நின்ற உத்தமர்கள் அனைவரையும் அலட்சியம் செய்யலாமா? சுதந்திரன் வழியாகத் தமிழ் அரசுக் கட்சியை அசைக்கமுடியாத வகையில் அரண்படுத்திய ஆற்றல் தங்களுடைய தனிப் பெரும் திறமையாகும்; ஆனால் இன்று வெட்கம் நாழி ஏரிசிக்காக மாயவலையில் சிக்கி உம்மை வளர்த்த இடத்தை மறந்து, உம்மை உயர்த்திய கட்சியை மறந்து சன்னதம் ஆடுகிறீர்; தமிழ் மக்களையும், தமிழ்த் தலைவர்களையும் பரிதாபத்துக்குரிய பைத்தியகாரர்கள் என்று எண்ணிக் காட்டிக்கொடுக்கும் கைங்கரியத்தை உம்மைப்போலும் ஒரு தமிழ் மகன் செய்லாமா? உம்மைப் பிடித்த தொற்று நோயைத் தினபதி வாயிலாகப் பரப்ப முயல்கின்றீர். அவ்வியாதி பரவாமல் தடுக்கத் தகுந்த முதற் சிகிச்சை தினபதியைத் தீண்டாமல் பகிஷ்கரிப்பதாகும். இதுதான் தமிழரின் முதற்கடமையாகும்.

தமிழரசுக் கட்சித் தலைவர்களைத் 'தந்தை' 'ஈழத்துக் காந்தி' 'இரும்பு மனிதன்' 'படேல்' 'தமிழ் அரசு மூளை' என்றெல்லாம் அழைத்தது யார்? இவ்வாறெல்லாம் பெயர் புனைந்து ஞானமுழக்கம் காட்டிய நீர் கோழையின் நிலையில் நின்று, ஆள்மாறி எழுதுகிறீர்; பண்டிதரின் வள்ளுவர் கழகத்தைச் சார்ந்து அவருக்குப் பாவாடை விரித்தீர். வள்ளுவர் விழாவைக் கொண்டாடும் நாள் பற்றிய பிரச்சினையில் பண்டிதருக்கு நீர் ஆலவட்டம் வீசவில்லையா? தண்பர் என்ற முறையில் சொல்லுகிறேன் உமக்கும் கொள்கைக்கும் வெகுதூரம். நீர் பள்ளியில் படிக்கவேண்டியவை ஏராளம். அரசியலில் அ. ஆ. படிப்பதற்கு உன்னாகவே அத்தாணி மண்டபத்தில் புகுந்துவிட்டீர்.

### விலை மாதுகளும் பத்திரிகை ஆசிரியர்களும்

சமீபகாலம் வரை பத்திராசிரியர்கள் பண்புள்ளவர்களாக, படித்தவர்களாக, புலமைமிக்கவர்களாக, மனிதருள் மாணிக்கங்களாக சுருங்கச் சொன்னால் சால்புடைச் சான்றோராக விளங்கினர். ஆனால் இன்றோ பேனா எடுத்தவனெல்லாம் பெரும் புலவனாகிவிட்டான். அவன் தன்னைப் பல்கலை பயின்ற நடமாடும் கலைக்களஞ்சியம் என்று ஏமாறுகிறான்; தனது எழுத்துத் திறனைக் கற்பை விற்கும் விலைமாதினைப்போல் விற்கிறான். கொள்கைகள் புறக்கணிக்கப்படுகின்றன; உம்மைப்போன்றவர்கள் தமிழரின் பண்பைக் கெடுக்கும் படுபாவிகளன்றோ! சமுதாயத்தை நாசப்படுத்தும் எழுத்து விபசாரிகள்! இன்றைய தமிழ்ப் பத்திரிகைகள் காமத்தை வாரியிறைக்கும் ஏடுகளாகவும், வாலிபர்களின் வாழ்வைப் பாழாக்குபவையாகவும், வனிதயரை விலைகூறி விற்பவையாகவும், உண்மைக்கு மாறான செய்தித்தாள்களாகவும் சின்னத்தனமாகச் சிண்டுமுடிந்து நாட்டைக் குட்டிச்சுவர் ஆக்குபவையாகவும் வெளிவருகின்றன; பச்சோந்திப் பத்திராதிபர்களே நாட்டின் நலனைக் கெடுத்து வருகின்றனர். பேனா வாளினும் வலியது என்னும் பழமொழி, பேனா நஞ்சினும் கொடியது என மாற்றப்படவேண்டும் போல் தெரிகிறது.

நானும் உம்மைப்போல ஒரு தமிழன்தான்; நாங்கள் தமிழர் நலன் பேணும் கட்சியை ஏன் ஆதரிக்கிறோம்? பட்டம் பதவி பெறவா? ஒருபோதும் இல்லை. தேசியம் பேசும் கட்சிகள் அத்தனையுமே ஈழத்தில் சிங்களவரை மக்கள் என்றும் தமிழரை விலங்கனைய மாக்கள் என்றும் கருதிவருகின்றன; எவ்வளவு துன்பம் நேர்ந்தாலும்

(தணிக்கை)

... ... ... ... தமிழரசுக் கட்சியையும் அதன் தலைவர்களையும் தாறுமாறாகத் திட்டுவதாலும் கிண்டல் செய்வதாலும் அதன் புகழ் மங்காது சுட்ட சங்கு போல் வெண்மை ஒளி மிகும்;

உமது பத்திரிகையைப் பார்ப்பது நாசம் எனக்கருதுபவன் யான்; திட்டிவிடம் என்னும் பாம்பு போன்ற தினபதியின் சிறுபகுதி ஒன்றைக் கத்தரித்து நண்பர் ஒருவர் — அரசாங்க எழுதுவினைஞர் — எனது மகனுக்கு அனுப்பியிருந்தார். அது 1-3-72 இல் வெளியான அத்தாணி மண்டபமாகும். அதை விமர்சிக்கப் புகுந்தால் நீர் புறமுதுகு காட்டி ஓடவேண்டி வரும். அற்பத்தனமான செய்கை உடையாரைப் பொறுக்கிகள் என்பது யாழ்ப்பாண வழக்கு. பரமார்த்த குருவின் சீடர்கள் விழுபவை யாவற்றையும் பொறுக்க வேண்டுமென்று கட்டளை பெற்றிருந்தவராம் குதிரை சாணி போட்டதாம் குருவின் தலைப்பாகையில் அந்தச் சாணியைப் பொறுக்கிப் போட்டனராம். இது கதை! ஆனால், தினபதியில் நீர் இத்துணை ஈனமான பொறுக்கி வேலையும் செய்கிறீர் என்று எமக்குத் தெரியாமல் போனது. தலைவர் இராசமாணிக்கம் அடித்த தந்தியில் ஆங்கில வழுவைக் கண்டு விட்டீர்! அவருக்குத் தமிழ்ப் பற்று இல்லை, ஆங்கில மோகம் என்கிறீர்.

நான் நீண்ட காலமாகத் தமிழில் மாத்திரம் தந்தி அனுப்பி வருகிறேன் ஆனால், அதனால் நான் அடைந்த இன்னல்கள் பன்னவும் படுமா? தந்தி தபாலிலும் பிந்திச் செல்லும் தன்மை. வருகிறார் என்பது ... வருகிறார் என மாறி ... புத்திரன் பிறந்தான் என்பது புத்திரன் இறந்தான் என்று இழவு கூறும் இராசமணிக்கு அனுப்பிய தந்தி இராமசாமியாக மாறி அனுப்பிய எனக்கே மீண்டது. இப்படியெல்லாம் வேண்டா வெறுப்பாக, அலட்சியமாகத் தந்திகள் கையாளப்படும் போது தமிழில் தந்தி அடிக்கவூக்கம் எப்படி உண்டாகும்? தலைவர் இராசமாணிக்கம் தமிழைப் புறக்கணித்து ஆங்கில மோகம் கொண்டு ஆங்கிலத்தைக் கையாளவில்லை. அவர் சமயோசிதமாக ஆங்கிலத்தைக் கையாளவேண்டியதாயிற்று. அவரில் குறைகாண முயல்வதும் பழிசுமத்துவதும் பொறுக்கித்தின்னிகளின் வேலையன்றிப் பண்புள்ள பத்திராசிரியரின் வேலையல்ல; நீர் கூறும் ஆங்கில வழு உண்மையில் இராசமாணிக்கத்தின் தவறோ, தலைமைதாங்கி வாசித்தவரின் தவறோ தந்தி பெற்ற ஊழியரின் தவறோ ஆராயப்படவேண்டியதொன்று Engagement என்னுஞ் சொல் Arrangement என எவ்வகையிலோ மாறிவிட்டது. அருண்டவன் கண்ணுக்கு இருண்டதெல்லாம் பேயாய் இருப்பது போல தமிழரசுக் கட்சியோ அதன் தலைவர்களோ செய்யும் சிறுதவறுகள் கூடப் பூதாகாரமாய் உங்களுக்குக் காட்சி அளிப்பதில் வியப்பெதுவுமில்லை.

ஆளுங்கட்சியினரைக் காக்காய் பிடித்துத் தினபதியின் தலைமை ஆசிரியராய் இருப்பதால் இறுமாப்புத் தலைக்கேறி மண்டை கனத்துவிட்டது என்று நான் உங்களுக்குப் புகழ்மாலை அணியத் தயாராயில்லை. எவ்வளவுதான் செல்வாக்கு உமக்கு இருந்தாலும் நீரான புத்தியை இழந்து விட்டீர்; நீர் சுதந்திரன் ஆசிரியராய் இருந்த காலத்தில் மாற்றாரைக் காறி உமிழ்ந்து, முச்சந்தியில் நிறுத்தி, நெஞ்சை நிமிர்த்திப் பகைவரைப் புறங்கண்டு பெருமிதத்தோடு வீதியில் உலாவவில்லையா? ஆனால் இன்று அத்தாணி மண்டபத்தில் தமிழினத்துக்கே கேடு சூழும் குடிலனாய் மாறிவிட்டீர்; உமது கற்பனைகளையெல்லாம் அவிழ்த்து விட்டு, ஊர்பேர் தெரியாத, தகப்பனில்லாத வம்புமகன் ஒருவன் உமக்குக் கடிதம் தீட்டியதாகக் கரடி விடுகின்றீர். கொஞ்சம் உளநூல் படியும்; உமக்கும் அத்தாணி மண்டபக் கிண்டலுக்கும் வெகுதூரம். உமது செய்தித்தாள் போர் (Bore) அடிப்பது போலத் தமிழரின் அறப்போர் நீர் விரும்புவதுபோல் பிசுபிசுக்காது என்று இன்ப ஈழத்தின் தமிழ் இளைஞர் படை உமக்குச் சொல்லி வைக்கும்படி என்னைப் பணித்துள்ளது.

தினபதியாரே! இந்த வழியில் நின்றால் இறுதியில் தமிழ் மக்கள் உம்மை முற்ற வெளியில் நிறுத்தி, வசைச் சொற்களால் தாக்கி அழித்து விடுவார்களென்பதை மறக்க வேண்டாம். உம்மைப் போன்றவர்கள் உலகம் நிந்திக்கவே வாழ்ந்தார்கள் என்று உலக வரலாறுகள் கூறுகின்றன. இனிமேலாவது உங்களுக்குத் தமிழரசுக்கட்சி மீதோ, அதன் தலைவர் மீதோ ஆத்திரமிருந்தால் வேறுவழியில் உமது சொந்த மனஸ்தாபத்தைப் பேசித் தீர்த்துக் கொள்ளும்; தமிழ் மக்களில் பெருந்தொகையினரின் பேராபிமானத்தைப் பெற்றுள்ள ஒரு கட்சியைத் தாக்கும் போது, பொது மக்களாகிய எங்களையும் புண்படுத்துகிறீர். இதுவரையில் பித்தனைப்போல எழுதியது போதும்; வீணே புலம்பாதீர்;

ஐயனே! சிவ சிவா! சுதந்திரன் ஆசிரியராயிருந்த காலத்திலும், இன்று ஈழத் தமிழர் மிக இழிவான, அடிமைத்தனமான நிலைக்குத் தள்ளப்பட்டனர்; அன்றும் இன்றுபோல் நீர் கூலிக்கு மாரடித்தீரா? தமிழரை தாழ்வினின்றும் மீட்கத் திட்டங்கள் பல தீட்டப்படவேண்டிய இந்த ஆபத்தான வேளையில் கோணங்கிகள் போன்று கொள்கையற்ற அரசியல்வாதிகள் சிலரும் தேசியம் தேய உதவும் பத்திராசிரியர்களும் வருங்காலத் தமிழினத்தை வாழவைக்கும் இதய முயற்சிக்கு உலை வைத்து, தமிழர்களை அணு அணுவாய்ச் சிதைத்து நிர்மூலமாக்கிவிடலாமென்று கிளம்பியிருக்கிறீர்கள். மழைகாலக் காளான்களைப் போல முளைத்துள்ள சூரியரையும், தியாகரையும், அருளம்பலத்தையும், சங்கரியரையும் இவர்களுக்கு வால்பிடிக்கும் தமிழர் விரோதிகளையும், வலை வலையாகச் சென்று துலைபோட்டுத் தேடி இருந்த இடம் தெரியாது ஒழித்துக்கட்டும் நாள்தான் தமிழன் விமோசனம் அடையும், விடுதலை அடையும் நன்னாளாகும்; தமிழர் நலன் பேணும் இயக்கங்களுக்கு உலைவைக்கும் ஈனக் கூட்டத்தினருக்குக் கட்டியங் கூறும் அத்தாணி மண்டபக் கட்டியங்காரரே உம்மை எட்டியடித்தே தீரவேண்டும்; துட்டராகிய உங்களைத் தொலைத்து விரட்டியடித்து நிற்கும் வீர உள்ளங்கள் ஊக்கம்பெற வேண்டும் என்னும் நோக்கத்தோடு எச்சரிப்பாகவே இவ்வஞ்சலைத் தீட்டுகின்றேன்.

—மறைமுதல்வன்.

---

# தமிழ் அமைச்சர் அவர்களே!

## கினிகத்தெனைத் தபால்கந்தோரில் நடந்ததைப் பார்த்தீர்களா?

தபாலமைச்சர் திரு. செ. குமாரசூரியர் யாழ்ப்பாணம் சென்றபோது பலாலி ஆசிரிய பயிற்சிக் கலாசாலையில் அவருக்கு வரவேற்புபசாரமொன்று நடந்ததாகவும் அதில் அவர் சிந்திய முத்துக்கள் சில 14-2-72 தினப் பத்திரிகைகளில் வெளிவந்திருந்ததை பலர் அறிந்திருப்பர். 'இலங்கை தமிழருக்கும், சிங்களவருக்கும் சொந்தமானது. தமிழர் இந்த நாட்டில் பயந்து வாழவேண்டியதில்லை. இலங்கையில் எப்பகுதியிலும் அவர்கள் பூரண சுதந்திரத்துடன் வாழ முடியும். சிங்கள மகனுக்கு இருக்கும் அதே உரிமை தமிழ் மகனுக்கும் இலங்கையில் இருக்கிறது. புதிய அரசியலமைப்பு அதற்கு வழிகாட்டுகின்றது' என்று திருவாய் மலர்ந்தருளினார் திருவாளர் குமாரசூரியர்;

புதிய அரசியலமைப்புத் தமிழ் மக்களை எவ்வாறு மட்டந்தட்டியுள்ளது என்பதை சுதந்திரன் அவ்வப் போது எழுதிவருவதையும் தமிழ் பேசும் மக்கள் நன்கு அறிவர். எட்டப்பர்களாக, [illegible] வாடிவரும் ஒரு சில தமிழர்கள் அவ்வப்போது போன போன இடங்களில் கொட்டிச்செல்லும் குப்பைக் கருத்துக்கள் தமிழ் மக்கள் மத்தியில் இன்று செல்லாக்காசாகி வருவதையுந் தமிழ் மக்கள் ஏற்றுக்கொள்வர்.

தமிழ் மக்கள் தமது சுயமரியாதையையும், தமிழுரிமையையும் சிங்கள மக்களிடமிருந்து காப்பாற்றுமுன், தம்மிடையே இடறு கட்டைகளாக இருக்கும் சுயநலத் தமிழர்களை, தமது புகழுக்கும், உல்லாச வாழ்வுக்குமாக தமிழ் உரிமையை உதாசீனம் செய்பவர்களைப் பூண்டோடு ஒழிக்க முன்வரவேண்டும். தமிழ் சமுதாயத்தின் முன்னாக இருக்கும் இவர்கள் மூலபலம் ஒட்ட நறுக்கப்பட்டாலேயே தமிழர் இன்று இந்த நாட்டில் தமிழர்களாகத் தலை நிமிர்ந்து வாழ முடியும்.

கூட்டத்தில் [illegible] டிநின்று கூடிப்பிதற்றி[illegible], நாட்டத்தில் [illegible] இனியே நான் [illegible] மறப்பாரடி என்ற இன்ற அரசாங்கத்திற்குத் துதிபாடும் தமிழர்களைப் பற்றிக் குறிப்பிட வேண்டியிருக்கின்றது.

பலாலியில் தபாலமைச்சர் [illegible] பேச்சுப் பத்திரிகைகளில் வந்த அன்று இதே தபாலமைச்சரின் கீழ் உள்ள தபாற்கந்தோரில் நடந்ததைத் தமிழ் பேசும் மக்கள் அறியவேண்டியது அவசியமாகும்.

14-2-72 அன்று நண்பகல் மலையகத்திலுள்ள கினிகத்தெனைத் தபாற்கந்தோருக்கு இரு மாணவர்கள் முத்திரை போஸ்காரிட், முத்திரை ஒட்டிய என்வலப் என்பன வாங்குவதற்குச் சென்றார்கள். அவர்கள் தமக்குத் தேவையானவற்றைப் பெறுவதற்கு தமிழில் எழுதிச் சென்றார்கள். அப்போது அங்கிருந்த அரசாங்க ஊழியரிடம் தமக்குத் தேவையானவற்றைப் பெறுவதற்கு எழுதிச் சென்ற கடதாசியை படித்தனர். அதற்கு அந்த ஊழியர் தனக்குத் தமிழ் தெரியாதென்றும், சிங்களத்தில் சொல்லுமாறு கேட்டாராம். மாணவர்களுக்குச் சிங்களம் பேசத் தெரியாது ஆனால் பேசும் சிங்களத்தைப் புரிந்துகொள்ளும் அறிவுண்டு மாணவர்கள் சிங்களம் தெரியாதென்று தமிழில் கூறினார்கள். அதற்கு அந்த ஊழியர் அப்படியானால் உனக்குத் தேவையானவற்றை மதுரைக்குப்போய் வாங்கு எனச் சிங்களத்தில் குறிப்பிட்டாராம். இங்கு ஏதும் வாங்க வருவதானால் இங்

(7ம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழ் ஈழத்தின் பொருள்வளம்

சமுத்திரு நாட்டின் இயற்கை வளமும் ஆற்றுவளமும் நிறைந்து சிறந்து விளங்கும் பிரதேசம் மேற்கும் தெற்கும் என்பதுவும், அதே நேரத்தில் ஆற்றுவளமும் நிலச்செறிவும் அற்றவானம் பார்த்த பிரதேசம் வடக்கும் கிழக்கும் என்பதுவும் வெள்ளிடைமலை.

ஆயினும் ஒருசில கைவேற்றி வாழ்ந்த காளான்களின் கருத்திற்கும் விடையிறுக்கவேண்டியது தவிர்க்க முடியாததாகிவிட்டது; தமிழன் திருக்குறள் வழிநிற்பவன், ஔவை மொழி பயின்றவன், அவன் ஏற்பது இகழ்ச்சி, ஐயம் இட்டு உண், என்று கற்றுனேயல்லாது ஏற்பது புகழ்ச்சி, ஐயம்ஏற்று உண் என்று கற்றுணல்லன். ஆயினும் எதற்கும் விதிவிலக்கு உண்டு என்பதற்கிணங்க எம்மிலும் சில விசமிகள் விதிவிலக்கிற்குள்ளாக்கப்பட்டுள்ளனர். அவர்களின் அறியாமைக்கு முற்றுப்புள்ளி வைக்க வேண்டியது எமது தலையாய கடன்.

ஆகவே 'வடக்கும் கிழக்கும் மணிவாடர்ப் பொருளாதாரமும்' என்று கூறும் கையேந்திகளுக்கு இதோ ஒரு பட்டியல். இலங்கை வாழ் மக்களின் பிரதான உணவு அரிசி. இலங்கையில் மிகக்கூடிய நெல் விளையும் பகுதி வடக்கும் கிழக்குமே யாகும். அதாவது, வவுனியா, கிளிநொச்சி, மட்டக்களப்பு, அம்பாறை, திருகோணமலை ஆகிய தொகுதிகளேயாகும். இது இவ்வாறிருக்க சென்றவருடம் வடமாகாணப் பொருட்கொள்வனவு சமாச ஆணையாளரின் மதிப்பீட்டின்படி இலங்கையில் உற்பத்தியாகும் நெல்லில் 32 விதம் நெல்லை வடமாநிலம் உற்பத்தியாக்கியுள்ளது என்பது உலகறிந்த உண்மை.

### வெங்காயமும் கிழங்கும்

உருளைக் கிழங்கை எடுத்துக்கொண்டால் இலங்கை பூராவுக்கும் தேவையான அளவில் 21 விதம் சென்ற சில வருடங்களாக வடமாநிலம் உற்பத்தியாக்கியுள்ளது. மேலும் தொடர்ந்து அபிவிருத்தி செய்ய முடியும் என்பதற்கு என்னால் உத்தரவாதம் அளிக்கமுடியும். அது மட்டுமல்லாது இன்னவெங்காயத்தை எடுத்துக்கொண்டால் வடமாநிலத்தை நம்பியே அரசாங்கம் வெங்காய இறக்குமதியை நிற்பாட்டியது என்பது சொல்லித் தெரியவேண்டியதல்ல. அது மட்டுமல்லாது அரசின் கெடுபிடியால் வடமாநிலத்தில் எவ்வளவோ வெங்காயம் பதங்கெட்டு விசப்பட்டும், கட்டுப்பாட்டு விலையிலும் குறைந்து விற்கமுடிகிறதென்றால் வடக்கின் வெங்காயப் பொருளாதாரம் உரித்த வெண்காயமாகவில்லை என்பது உள்ளங்கை நெல்லிக் கனிபு மேலும் இத்தனை அநியாயத்தின் மத்தியிலும் சென்றவருடம் உருளைக்கிழங்கு, வெண்காயம் ஆகிய பொருட்கள் தென்னிலங்கைக்கு ஏற்றப்பட்டதால் வடமாநிலம் 23 கோடியே 38 லட்சம் ரூபாவைப் பெற்றது (வடமாநில பொருட் கொள்வனவு ஆணையாளர் அறிக்கை) என்றால் வடமாநிலப் பொருளாதாரம் போஸ்டல் ஓடர் பொருளாதாரமா அல்லது மணியாடர்ப் பொருளாதார்மா என்பதைப் பச்சோந்திகள் உணர்வார்களாக.

### உப உணவு

உபஉணவுப் பொருளான மீனை எடுத்துக்கொண்டால் வடக்கில் மன்னார், பருத்தித்துறை, காரைநகர், கிழக்கில் மீன்பாடும் தேன்நாடாம் மட்டுநகர், கல்முனை திருகோணமலை ஆகியவையே அதிக மீனைத் தருகிறது. இதற்குச் சான்றாக, இலங்கைப் புகையிரத சேவை மன்னாரிலிருந்து கொழும்புவரை ஒரு மீன் சேவைத் தொடரினைப்பைத் தினமும் நடாத்துகின்றது என்பதிலிருந்து தெரிகிறதல்லவா வடமாநில மீன் பொருளாதாரம். இலங்கையின் ஏற்றுமதிப் பொருட்களில் கடலட்டையும் ஒன்றாகும். இது எங்கு பிடிக்கப்படுகிறது என்பதை மணியாடர்ப் பொருளாதாரப்பட்டதாரி அறிய விரும்பினால் பழைய பத்திரிகைகளைப் புரட்டட்டும். நிற்க,

> மன்னாரில் முத்துண்டு! மட்டுநகர் நெல்லுண்டு!
> கண்ணாடி கடதாசி கனிப்பொருள் மிகஉண்டு!
> பண்ணைப்பசு உண்டு! பல் உணவுப் பயிருண்டு!
> தென்னை உண்டு! தேனுண்டு! திறமான உப்புண்டு!
> தொன்மைமிகு கோணமலைத் துறைமுகமும்உண்டு!
> என்னதான் இல்லை தமிழ் ஈழ நாட்டினிலே...

### வாயாடி

செத்தல் மிளகாய், நிலக்கடலை, என்பனவற்றை நோக்கும்போது வடமாநிலப் படித்த வாலிபர்கள் விவசாயத் திட்டத்தால் அரசாங்கசேவையிலிருந்துசேர்த்த பொருளாதாரத்திலும் பார்க்க அதிகம் சேகரித்துள்ளனர் என்பதை அவர்கள் வாயிலாகவே அறியமுடிகிறது என்பதை மணியாடர் மடையர்களுக்குச் சொல்லிவைக்க ஆசைப்படுகிறேன். நிற்க,

இலங்கையின் உன்னத உப்பளங்களான ஆனையிறவு, செம்மணி, கல்லுண்டாய் ஆகியன வடமாநிலத்திலேயே உண்டு என்பதை ஆரும் பாரம் படித்த பாலகனும் கூறுவான்: இதை அறியாது பிதற்றும் பித்தலாட்டங்களுக்காக ஒரு நிமிட மௌன அனுட்டானம்; நிற்க,

இறுதியாக உணவுப் பொருட்களைப் பொறுத்த மட்டில் நாம் எவரையும் நாடி நிற்க வேண்டியதுமில்லை நிற்கப் போவதுமில்லை. வடக்கு வாழ்வழிக்கும், வருவோரை வரவேற்கும் எனத் திடசங்கற்பங்கூறி நடந்த ஒன்றை உதாரணங்கூறி விடைபெற விழைகிறேன்.

அதாவது சென்ற அரசாங்கத்தில் அரிசி ஒருபடியாக்கப் பட்டபோது வடக்கான் வளைந்தானா. இல்லை. அன்றி இரண்டுபடி அரிசி தருவோம் என்ற மேடைப் பேச்சிற்கு வாக்களித்தானா என்றால் அதுவும் இல்லை. மூலைமுடுக்கெல்லாம் இராசவள்ளியை, மரவள்ளியை உண்டாக்கினான் தினை விதைத்தான் திமிருடன் வாழ்ந்தான், வடலி வளர்த்தவனான் மரவள்ளியும் தினையும்கொண்ட திணைக்குதமாக நிகழ்ந்தது என்பதை திருவாளர் மணியாடர் மறந்திருப்பார் என யான் கருதவில்லை;

இதே நேரத்தில் சென்ற 1960வது ஆண்டு சத்தியாக்கிரகத்தில் தொடர்ந்து இரண்டு மாதங்களுக்கு மேலாக இலங்கையின் பஞ்சப்படி (பங்கீட்டரிசி) கொடுபடவில்லை ஆனால் வடமாநிலத்தில் பஞ்சத்தால் பாதியுயிராவது போகவில்லை என்பதையும் மணியாடரின் பார்வைக்குச் சமர்ப்பிக்கிறேன். நிற்க;

உடுபுடவை பற்றி ஒருசில வார்த்தைகள்: வல்வையம்பதியில் வளமுடன் திகழும் ஆலையும், திருநெல்வேலியில் திடமுடன் உருவாகும் பொறி தறியும், மாநிலம் அடங்கிலும் மகவென வளரும் கைத்தறிகளும் போதுமா போதாதா. போதாவிட்டால் வல்லுவெட்டித்துறை வாழ் மக்களின் வண்ணவண்ணச் சேலைகள் இருக்கவே இருக்கிறதல்லவா:

வேலைவாய்ப்புகள்: கண்ணாடித் தொழிற்சாலையும் மூலப் பொருட்களும், (திருமலை யாழ்ப்பாணம், நாகர்கோவில்), சீமெந்துத் தொழிற்சாலையும் மூலப்பொருளும் (காங்கேசன்துறை முருங்கன்) பரந்தன் இரசாயனத் தொழிற்சாலையும் மூலப் பொருட்களும் (பரந்தன்) மட்பாண்டத் தொழிற்சாலைகளும் மூலப்பொருட்களின் (சங்கானை, வவுனியா, முருங்கன்) சீனித் தொழிற்சாலையும் மூலப் பொருட்களும். காகிதத் தொழிற்சாலையும் மூலப் பொருட்களும் (வாழைச்சேனை), இவ்வாறே கறிப்போமின் பட்டியல் பெருகிவிடும் உண்மையை நிரூபிக்க மூன்று உதாரணங்கள் போதாதா. நிற்க;

வடக்கின் எண்ணெய்வளம் இரசிய, இஸ்ரேல் ஆராய்ச்சிகளின் முடிவு. ஆனால் ஆராய்ச்சி தொடர்ந்து இருட்டடிப்பு;

துறைமுக வர்ணனைத் தொடர் இதோ! இலங்கையை மட்டுமல்லாது உலகின் கண்ணையே தன்பக்கம் இழுக்கும் துறைமுகம் இயற்கைத் துறைமுகமாம் திருமலையும் வடக்கே நோக்கின் காங்கேசன்துறை, பருத்தித்

(7-ம் பக்கம் பார்க்க)

# தமிழ் ஈழம் தங்க ஈழம்!

கடந்த வாரச் சுதந்திரனில் நண்பர் சேமமடு நல்லையா என்பவர் ஈழத்தமிழகத்தின் பொருள் வளம் பற்றிக் குறிப்பிட்டிருந்தார். அன்பர் கூறுவது போல இலங்கை வாழ் தமிழ்பேசும் மக்களுக்குத் தேவையான எல்லா வளங்களும் யாழ்ப்பாணக் குடாநாடு, வன்னி வளநாடு, மறத்தமிழர் எழிற்கோட்டமாம் திருமலை மச்சங்கள் பாடும் மட்டக்களப்பு, மாண்புயர் செந் நெல் விளையும் மன்னார் மாவட்டங்களிலே நிச்சயமாகஉண்டு. வன்னிநாடு, திருமலை, மட்டக்களப்பு பகுதிகளில் பெருந்தொகையான ஏக்கர் நிலங்களில் இன்று நெல் செய்கைபண்ணப்படுவதை எல்லோரும் அறிவர். இன்னும் எத்தனையோ ஆயிரக்கணக்கான ஏக்கர் நிலங்கள் இந்தப் பகுதிகளிலே தரிசாகக் கிடக்கின்றன: கிளிநொச்சி முதல் வவுனியா வரையும் உள்ள பகுதிகளை புகைவண்டியில் வரும்போதோ அல்லது மோட்டாரில் வரும் பொழுதோ பாருங்கள். கண்ணுக்கெட்டிய தூரம் வரை ஒரே பச்சையிலைக் காடுகள்! இதே போலத்தான் வவுனியா தொடக்கம் முருங்கன் வரையுள்ள பகுதிகளும் மன்னாரிலிருந்து பூனகரி செல்லும் பாதையிலும் இதே காட்சியைக் காணலாம். எங்கள் ஈழவள நாடு வளம் பொருந்திய நாடு மக்கள் ஒருமித்துப் பாடுபட்டால் எமது நாட்டிலே தேனும் பாலும் பெருகி ஓடும் என்பதற்கு ஐயமில்லை.

ஆனால் எமக்கு என்று ஒரு அரசு ஏற்படும் வரையும் இந்த நிலங்களை நாங்கள் முழுமையான முறையிலே பயன்படுத்த முடியாது. தமிழ் மக்கள் கூடுதலாக வசிக்கின்ற பகுதிகளிலிருந்து மன்னார் வன்னி மாவட்டங்களிலே குடியேற வேண்டும்: தமிழ்ப்பகுதிகளை விட்டுத் தங்கள் தொழில்கட்காக சிங்களப் பகுதிகளில் கடைகள் வைத்தும் கொந்த ராத்து வேலைகள் செய்தும், ஏறத்தாழ ஐந்து இலட்சத்திற்கு மேற்பட்ட மக்கள் வாழ்ந்து வருவதாகக் கூறப்படுகின்றது. இவர்கள் எந்த நேரமும் மிகுந்த பயத்துடனேயே வாழ்கிறார்கள்: அது மட்டுமல்ல நாள்தோறும் காடையர்களுக்குக் கப்பம் கொடுத்து வாழும் பல நூற்றுக் கணக்கான வர்த்தக நண்பர்களை எனக்குத் தெரியும். ஏன் இந்த நிலை. தமிழ்ப் பகுதிகளுக்கு வந்து முதலீடு செய்தால் என்ன? தமிழ்ப் பிரதேசங்களிலுள்ள காடுகளை அழகிய சனாக்கினால் என்ன? என்று கேட்கவிரும்புகிறேன். பெரும் பாவான செல்வந்தர்கள் தமிழ்ப்பகுதிகளுக்கு வந்து முதலீடு செய்தல் வேண்டும்.

தமிழ்ப்பிரதேசங்களில் கமம் செய்ய விரும்பும் அன்பர்களுக்குப் பல விதமான தொல்லைகள் உள்ளன. இவற்றைத் தீர்த்து வைப்பதில் அரசுக்கும் அக்கறையில்லை: ஓரளவுக்குக் கணிசமான தொகையில் முதலீடு செய்யக் கூடியவன் மட்டுமே இந்தப் பகுதிகளில் கமம் செய்ய முடியும். சாதாரண நிலையில் வாழும் தமிழ் மக்களால் இந்த முயற்சிகளைச் செய்ய முடியாது. எனவே தமிழ்ப் பகுதிகளில் வசிக்கின்ற தமிழ் வர்த்தகப் பெருமக்கள் தம் முதலீடுகளைத் தமிழ்ப் பகுதிகளில் இடவேண்டும். இவ்வாறான முயற்சிகளுக்கு முன்னோடியாக இருந்த ஒருவர் கலைவாணி அவர்கள். அவர் மன்னார் மாவட்டத்தின் இலுப்பைக் கடவைப் பகுதியிலே விவசாயம்செய்ய முன்வந்து தமிழ்ப் பகுதியின் பொருள் வளத்தைப்பெருக்க மிகுந்த பாடுபட்டுழைத்தார். இன்று அவர் அமரராகி விட்டார். இதே போன்ற ஒருவர் வவுனியாவில் வாழ்ந்த அமரர் சிவபாத சுந்தரம் அவர்கள். வவுனியாவில் திராட்சைச் செய்கையைக் கூட அவர் நடாத்திக் காட்டினார். எனவே இந்த இரு தமிழ்ப்பற்றுடைய வர்த்தகப் பெருமக்கள் காட்டிய முன்மாதிரியை ஏற்று ஏனைய வர்த்தகப் பெருங்குடி மக்கள் இப் பகுதிகளுக்கு வந்து ஈழத்தமிழகத்தின் பொருளியல் வளத்தைப் பெருக்க வேண்டும்,

நாம் எங்குதான் தொழில் செய்தாலும் ஈழத்தமிழ்நாடு இன்றைய இலங்கையின் வடகீழ் மாகாணங்கள் மட்டுமே என்பதை எந்த ஒரு ஈழத்தமிழனும் மறந்து விடக்கூடாது. 1958ல் ஏற்பட்ட வகுப்புக் கலவரத்தின் போது அடிபட்டு உதைபட்டு அல்லற்பட்ட தமிழர்கள் கடைசியில் வடகீழ் மாகாணங்களுக்கு மட்டுமே கப்பலேற்றப்பட்டார்கள்; ஏன் இலங்கையின் வேறு மாகாணங்களுக்கு அனுப்பப்படவில்லை என்பதை எல்லாத் தமிழனும் யோசிக்க வேண்டும். வடகீழ் மாகாணங்களுக்கு மட்டும் ஏன் நாம் அனுப்பப்பட்டோம்.

அதை விட்டு விட்டுப் பதுளை மாத்தறை, காலி, நீர்கொழும்பு என எல்லாத் தமிழரும் பிரிந்து வாழ்ந்திருப்பார்களாயின் அன்றைய நிலையில் என்ன நடந்திருக்கும் என்பதை நாம் யோசிக்கவேண்டும். அரசாங்கமும் வடகிழ் மாகாணங்கள் இலங்கைத் தமிழரின் பரம்பரைத் தாயகம் என்பதைஏற்றுவிட்டது. எனவே தான் எல்லோரும் சேர்ந்து எமது பகுதிகளின் பொருளாதாரத்தை வளர்க்கமுன் வரவேண்டும்.

இந்தப் பகுதிகளில் கமம் செய்வதிலே சில கஷ்டங்கள் உள்ளன என்பதையும் மறுப்பதற்கில்லை. இவை வானம் பார்த்த பூமி. எனவே போதிய நீர் வசதி பெறும் முயற்சிகள் மேற்கொள்ளப் படவேண்டும். குழாய்க் கிணறுகள் மூலமாகவே அல்லது வேறு வழிகளிலோ நீர் வசதி பெருக்கப்படவேண்டும். பல நூற்றுக் கணக்கான பழைய குளங்கள் இப் பகுதிகளிலே தூர்ந்துபோய்க் கிடக்கின்றன. இவற்றைச் சிரமதானம் மூலமாக ஆவது சுத்தமாக்கப்பட வேண்டும். புதிய பொறிச் சாதனங்கள் வேண்டும். எனவே கணிசமான தொகையை முதலீடு செய்வதன் மூலமாகவோ அல்லது கூட்டுறவு முறையிலேயோ தான் எமது பகுதிகளை அபிவிருத்தி செய்ய முடியும்: இவற்றைச் செய்து முடிக்கத் தமிழ் பேசும் வர்த்தகப் பெருமக்கள் முன்வருவார்களாக!

— திருக்கேதீஸ்வரன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## எண்ணம்

# தொழிலாளர் குரலை தூக்கி எறியாதீர்!

"புதிய அரசியல் சட்டம் தமிழர்களை மனித உரிமைகள் கூட அற்ற அடிமைகளாக்கி விடும் ஆகவே புதிய அரசியல் சட்டத்தை ஈழத் தமிழினம் பகிஷ்கரிக்க வேண்டும்" என்று தமிழரசுக் கட்சி நாடு பூராவும் பிரசாரம் செய்து வருகிறது.

தமிழரசுக் கட்சிக் கூட்டங்களில் தமிழ் மக்கள் வெள்ளம் போல் திரண்டு — தலை நிமிர்ந்து — வீர முழக்கமிடுவதைக் காண்கிறோம். இவ்வேளையில் "இது வெறும் இனவெறியர்களின் கூச்சல்" என்று அரசியல் உலகில் விலாசமில்லாத ஒன்றிரண்டுகள் போடும் சத்தம் எம் காதுகளில் விழாமல் இல்லை.

"தொழிலாளர்களின் சோசலிச அரசாங்கத்தைச் சேர்ந்த உறுப்பினர்கள் தயாரிக்கும் புதிய அரசியல் சட்டத்தை முதலாளி வர்க்கத்தினர் முறியடிக்கப் பார்க்கிறார்கள்" என்று ஒரு விழல் நியாயமும் கூறப்படுகிறது.

புதிய அரசியல் சட்டத்தை எதிர்க்கும் தமிழர்கள் யார்? முதலாளி வர்க்கத்தினரா?

கிழக்காசியாவிலேயே மிகப் பெரிய பெரிய தொழிற் சங்கங்களில் ஒன்றான இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் புதிய அரசியல் சட்டத்தை எதிர்க்கிறது. பதினைந்து இலட்சம் தேயிலைத் தோட்டத் தமிழ்த் தொழிலாளரின் மாபெரும் தொழிற் சங்கம் தொழிலாளர் காங்கிரஸ். அத்தோடு அதே மலையகத் தொழிலாளரின் உரிமைக்காகப் போராடும் இலங்கைத் தொழிலாளர் கழகமும் புதிய அரசியல் சட்டத்தை எதிர்க்கிறது.

அரசாங்க எழுதுவினைஞர் சங்கம், அஞ்சல் எழுதுவினைஞர் சங்கம், தமிழ் மொழி பெயர்ப்பாளர் சங்கம், தமிழ் தட்டெழுத்தாளர் சங்கம், துறைமுக நாவாய் இயக்குநர் சங்கம், துறைமுக வழிகாட்டி அத்தியாவசிய ஊழியர் சங்கம், மத்திய வங்கி தமிழ் ஊழியர் சங்கம், இலங்கை பஸ் தொழிலாளர் கழகம், துறைமுக கூட்டுத்தாபன தமிழ் ஊழியர் சங்கம், புகையிரத ஊழியர் சங்கம் ஆகிய இத்தனை மொழிவழித் தமிழ்த் தொழிற் சங்கங்களும் புதிய அரசியல் சட்டத்தை எதிர்க்கின்றன. ஒரு பெரும் தொழிலாளர் சமுதாயமே ஒன்று திரண்டு புதிய அரசியல் சட்டத்தை எதிர்க்கிறது.

ஆகவே, 'தமிழ் மக்களிடையில் உள்ள முதலாளி வர்க்கத்தினரே புதிய அரசியல் சட்டத்தை எதிர்க்கிறார்கள்—இது முதலாளி வர்க்கம் கிளப்பிவிடும் இனவெறியர்களின் வெறும் கூச்சல்' என்று அரசாங்கமும் அரசாங்கத்தின் அடிவருடிகளும் கட்டிவிடும் கதைகள் அர்த்தமற்றவையாகும்.

மலைநாட்டின் 15 இலட்சம் தமிழ்த் தொழிலாளரைத் தொடர்ந்தும் குடியுரிமையற்ற மாடுகளாக—ஆடுகளாக நடத்த இப்புதிய அரசியல் சட்டம் வழிசெய்கிறது.

தமிழ் மக்களின் மொழி நில உரிமைகள் மட்டுமல்ல—தமிழ்த் தொழிலாள வர்க்கத்தின் பெரும் உரிமைகள் அனைத்தும் புதிய அரசியல் சட்டத்தினால் பிடுங்கி எடுக்கப்படுகின்றன.

தமிழ்த் தொழிலாளர்களின் நிலைதான் இதுவென்றால் தமிழரிடையே தொழிலில்லாத் திண்டாட்டத்தால் பாதிக்கப்பட்டுள்ள வேலையற்றோர் நிலை இதைவிட மோசமானதாகும். இலங்கை மக்கள் தொகையில் மூன்றில் ஒரு பகுதியினர் தமிழராய் இருந்தும் மூன்றூறு சிங்களவருக்கு ஒரு தமிழர் என்ற அடிப்படையிலேயே வேலைவாய்ப்புக்கள் வழங்கப்படுகின்றன. புதிய அரசியல் சட்டம் தமிழரது உரிமைகள் அனைத்தையும் பறிக்கும் நிலையில் தொழில்வாய்ப்பில் நிலவும் இந்தப் பாரபட்ச நிலை மேலும் அதிகரிக்குமே அன்றி குறைய இடமில்லை.

எனவே சிறிமாவோ அம்மையாரின் சிவப்பு—நீல தொழிலாளர் அரசாங்கம் தமிழரின் 'புதிய அரசியல் சட்ட எதிர்ப்புக் குரலை' தமிழரிடையே உள்ள தொழிலாளரினதும், தொழிலில்லாத் திண்டாட்டத்தால் பாதிக்கப்பட்டுள்ள ஏழைகளதும் நியாயமான உரிமைக் குரலாகக் கருதவேண்டும்.

வடக்கிலும் கிழக்கிலும் மலையகத்திலும் உள்ள ஓரிரு முதலாளிமார்தான் அரசாங்கத்திடம் தங்கள் வியாபாரத்துக்கு கோட்டா பெறவேண்டும் எனும் காரணத்தால் புதிய அரசியல் சட்டத்தை ஆதரித்து—அரசாங்கத்துக்கு அடிவருடி—அறிக்கைகள் விட்டு—கூத்தாடுகிறார்கள்.

குருதியும் வியர்வையும் சிந்தும் பல இலட்சம் தொழிலாளரின் குரலை விட 'கோட்டாக்'காக அரசினருக்குக் குடைபிடிக்கும் ஓரிரு முதலாளிகளின் குரலே பெரிதென அம்மையார் அரசாங்கம் கருதினால், அதற்—கன்ன— புதிய அரசியல் சட்டத்தைக் கொண்டு வரட்டுமே... இப்போது மட்டும் அரசாங்கத்தின் சோசலிசம் வாழ்கிறதா என்ன!

# இஸ்லாமியர் தமிழரே!

இஸ்லாமியர்களாகிய எங்களுக்கும் தமிழுக்கும் உள்ள தொடர்பை உலகில் எந்த சக்தியாலும் உடைத்தெறிய முடியாது. அன்னை வயிற்றிலிருந்து இந்த உலகத்துக்கு வந்து சேர்ந்ததும்— முதன் முதல் நாங்கள் பேசிய மொழி தமிழ்! அதற்குப் பின்னர் நாங்கள் வளர்ந்து அறிவு வந்த வேளையில்தான் அரபு மொழியில் எங்கள் மறையான திருக்குர் ஆனை பயின்றோம். ஆகவே அரபு மொழி எங்களுடைய திருக்குர் ஆன் எழுதப்பட்ட மொழியாக இருக்கலாம்—ஆனால் எங்கள் உயிரினும் இனிய தாய் மொழி தமிழே! எப்படி வங்காள நாட்டு முஜிபுர் ரகுமானுக்கு அரபு மொழியை விட அவரது தாய்மொழியான வங்காளமொழி பெரிதாக இருந்ததோ—அப்படியே எங்களுக்கும் அரபு மொழியை விட தமிழ் மொழியே இனியதும்—உயிருக்கு இணையானதும் ஆகும்.

மொழியை எடுத்துக்கொள்வோம்: அரபு இனத்தவர்கள் தான் அவர்கள் என்றால் அவர்கள் சாதாரணமாக வீட்டில் பேசும் தமிழில் அரபுச் சொற்கள் நிறையக் கலந்திருக்கவேண்டுமல்லவா? அப்படி ஒன்றும் அந்த இஸ்லாமியர்கள் பேசும் தமிழில் இல்லையே...! எங்களை எப்படி நீங்கள் அராபியர்கள் என்று கூறலாம்?

### ஜனாப் அப்துல் ஜபார்

இலங்கைக்குவந்த போர்த்துக்கீசரில் சிலர் மட்டக்களப்பில் ஓரிடத்தில் தங்கி வாழ்கிறார்கள். அவர்கள் பரங்கியர்கள் என்று அழைக்கப்படுகிறார்கள். அவர்களது வீடுகளில் இன்றும் போர்த்துக்கீச மொழியே பேசப்படுகிறது. அதுபோல் அரபு நாட்டில் இருந்து வந்தவர்கள் நாங்கள் என்றால் எங்

ஜேத் தமிழ் ஆற்றல் எமக்கு வருமா? வராது! வராது!

ஐந்தாவதாக புனித இஸ்லாமிய மதம் எங்கள் மதமான பின்பு அப்துல் காதர், மஜீத் போன்ற பெயர்களை நாங்கள் சூடிக்கொண்டாலும் இன்றும் எங்களில் பலருக்கு வெள்ளைத்தம்பி, மரைக்காயர் (மரக்கல ஆயர்) போன்ற தனித் தமிழ்ப் பெயர்களே வைத்துள்ளோம். இதுவும் எங்கள் பூர்வீகத் தமிழ்த் தொடர்புக்கு ஓர் சிறந்த எடுத்துக்காட்டு அன்றோ?

தமிழ் நாட்டில் உள்ள இஸ்லாமியரும் இலங்கை இஸ்லாமியர்களைப் போல முழுத் தமிழரே. தமிழ் இனத்தை பெரிதென மதித்த காரணத்தினால்தான் தமிழ் நாட்டில் இருந்த சுந்தர பாண்டியன் என்ற மன்னன் ஈழத்தின் மன்னனான பராக்கிரமபாகுவுக்கு எதிராக போர்தொடுத்தபோது, அங்

## இஸ்லாமிய தமிழர் இயக்கம்

இலங்கையில் உள்ள இஸ்லாமியர்களாகிய நாங்கள் அராபியாவில் இருந்து இங்கு வந்து குடியேறியவர்கள் அல்ல. பழம்பெரும் காலம் தொட்டு—ஈழத்திற்கு விஜயன் வருவதற்கு முன்பிருந்தே—இந்நாட்டில் தமிழர்களாய் வாழ்ந்து வருகிறவர்கள் நாங்கள். அராபியாவில் இருந்து ஈழத்துக்கு வந்த வணிகர் சிலர் ஒப்பிலாத நபிகள் பெருமானாரின் இஸ்லாமிய மதத்தைக்கொண்டு வந்தார்கள். அந்த நேரத்தில் இந்நாட்டில் தமிழராய் வாழ்ந்த நாங்கள் இஸ்லாமிய மதத்தின் அரிய கோட்பாடுகளால் ஈர்க்கப்பட்டு இஸ்லாமிய மதத்தைத் தழுவினோம்; ஆகவே தமிழ் எங்கள் இரத்தத்தோடு கலந்தது என்பதையும்— இஸ்லாம் எங்கள் இதயம் ஏற்றுக் கொண்டது என்பதையும் யாரும் மறந்து விடக் கூடாது.

இலங்கையில் வாழும் இஸ்லாமியர் முதலில் தமிழர்! பின்புதான் அவர்கள் இஸ்லாமியர்!

முதலில் கிழக்கு மாகாணத்தில் வாழும் இலட்சக் கணக்கான எமது இஸ்லாமியர்களை எடுத்துக்கொள்வோம். இவர்களில் பெரும்பாலானோர் கறுப்பு நிற மேனி உடையவர்களாகவோ அல்லது வெளிறிய கறுப்பு நிறம் உடையவர்களாகவோ தான் காணப்படுகிறார்கள்.

இது அசல் திராவிடத் தமிழரின் உடல் வண்ணமாகும். இப்பகுதியில் உள்ள இஸ்லாமியரில் சிலர் இளஞ் சிவப்பு — அல்லது இள மஞ்சள் நிற மேனியுடையோராய் இருப்பதற்கும் ஒரு காரணம் உண்டு. இஸ்லாமிய மதத்தைத் தழுவிய தமிழ்ப் பெண்கள் இஸ்லாமிய ஒழுக்கத்துக்கு அமைய வேலிகள் மறைவில் — வெயில் படாத வீட்டுச் சுவர்களுள் — முக்காடிட்டபடி நெடுங்காலம் வாழ வேண்டியிருந்ததால் இப்படியான மாறுபட்ட வெளிறிய மஞ்சள் நிற மேனியோடு சில குழந்தைகள் பிறந்தன.

இரண்டாவது கிழக்கு மாகாணத்தில் வாழும் இஸ்லாமியர்களின் தாய்

கள் வீடுகளில் இன்றும் நாங்கள் அரபு மொழியல்லவா பேசவேண்டும் — அல்லது அரபுகலந்த தமிழல்லவா பேசவேண்டும்—? இரண்டும் இல்லையே!

மூன்றாவது கிழக்கிலங்கையில் இஸ்லாமியர்களாகிய நாங்கள் வயல்வெளிகளில் அன்றாடம் தமிழில் மிக அழகான நாட்டுப் பாடல்களை இயற்கையாக ஆக்கிப்பாடிக் களிக்கிறோம். எழுத்தோ இலக்கணமோ படிப்போ பட்டமோ இல்லாத நாங்கள் அழகுத் தமிழில் நாட்டுப் பாடல்களை ஆக்குகிறோம்; தமிழை தாய்மொழியாகக் கொண்டவர்களுக்கே இந்த இயற்கை ஆற்றல்வரும். நாங்கள் அராபிய இஸ்லாமியர் என்றால் இத்த இயற்

கிருந்து ஜமாலுத்தீன் என்ற ஓர் இஸ்லாமிய வீரன் தலைமையில் பல இஸ்லாமிய தமிழரை உள்ளடக்கிய படை ஈழத்திற்கு வந்து பராக்கிரமபாகுவைவென்று பாண்டியனுக்கு வெற்றி தேடிக்கொடுத்தது. இது வரலாற்று நிகழ்ச்சி.

எனவே, இலங்கையில் உள்ள இஸ்லாமியர்களின் உடலில் ஓடும் தமிழ் இரத்தத்தை எவரும் சந்தேகித்தால் அவர்கள் முழு முட்டாள்களாகவே இருப்பார்கள்: ஈழத்து இஸ்லாமிய தமிழரை சிங்களவராய் மாற்றத் துடிக்கும் பதியுதீன் கும்பலும் — மஜீத் கூட்டமும் இந்த உண்மையை நினைவில் வைத்துக்கொள்ள வேண்டும்.

## திருவாரூரில் திரு. வி. க.வுக்குச் சிலை

சாலை இளந்திரையன் வேண்டுகோள்

தமிழ் முனிவர் திரு. வி. க. அவர்களுக்கு அவருடைய ஊராகிய திருவாரூரில் உருவச் சிலை ஒன்று அமைக்க ஏற்பாடு நடைபெற்றுவருகிறது. சிலை அமைப்புக் குழுவின் துணைத்தலைவர்களுள் ஒருவராகிய தில்லிப் பல்கலைக்கழகப் பேராசிரியர் டாக்டர் சாலை இளந்திரையன் அவர்கள் இதுபற்றி இலங்கைத் தமிழர்களுக்கு ஒரு வேண்டுகோள் விடுத்திருக்கிறார். அந்த வேண்டுகோளில் அவர் குறிப்பிட்டிருப்பதாவது:

"விடுதலை இயக்கம்; நல்ல தமிழ்ப் பத்திரிகை, பேச்சு மேடை, சமய சமுதாயச் சீர்திருத்தம், தொழிலாளர் இயக்கம் முதலான பல துறைகளில் ஈடுபட்டுத் தமிழ் மக்களுக்கும் தமிழுக்கும் பெருமை தேடித் தந்தவர் தமிழ் முனிவர் திரு. வி. க. அவர்கள். அவருடைய எழுத்தாலும் பேச்சாலும் தமிழுக்குப் புதியதொரு நடை கிடைத்தது. அந்த நடை தமிழுக்கு ஓர் எழிலையையும் சுறுசுறுப்பையும் தந்தது. இவற்றை எல்லாம் மறவாத தமிழ் மக்கள், அவருடைய நினைவைப் பலவழிகளில் போற்றி வருகிறார்கள்.

திருவாரூரில் அவருடைய உருவச்சிலை ஒன்றை நிறுவக் கருதிய அவ்வூர் அன்பரிலர் குன்றக்குடி அடிகளின் தலைமையில் சிலை அமைப்புக் குழு ஒன்றை அமைத்துள்ளார்கள். நாட்டின் பல துறைப் பேரறிஞர்கள் குழுவின் இணைத்தலைவர்களாகவும் உறுப்பினர்களாகவும் பொறுப்பேற்றிருக்கிறார்கள்.

"உலகெங்கும் உள்ள தமிழ்ப்பெருமக்கள் இப்பணிக்குப் பொருள் உதவி செய்யவேண்டும் என்பது சிலையமைப்புக் குழுவினரின் பெருவிருப்பம். தமிழகத்தின் பல நற்பணிகளுக்குப் பேராதரவு காட்டி வந்துள்ள இலங்கைத் தமிழ் அன்பர்கள் இப்பணிக்கும் தங்கள் அன்பாதரவை வழங்க வேண்டுமென்று அன்புடன் கேட்டுக்கொள்ளுகிறேன்.

"திரு. வி. க. சிலையமைப்புப் பணிக்கு நிதி உதவ விரும்புவோர் (டாக்டர் சாலை இளந்திரையன், 3362/1, கிறிஸ்டியன் காலனி, புதுடில்லி-5. என்னும்) என் முகவரிக்கு அனுப்புங்கள்; அல்லது த. சரவணத்தமிழன், 13/1, நடவனைத் தெரு, திருவாரூர், தஞ்சாவூர் மாவட்டம், தமிழ்நாடு என்னும் முகவரிக்கு அனுப்பி உதவுங்கள்."

இவ்வாறு அந்த வேண்டுகோள் அறிக்கையில் கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழன் தமிழனுக வாழத் தமிழரசு வேண்டும்!

புதிய அரசியல் திட்டத்தால் தமிழ் மக்களுக்கும், தமிழ்மொழிக்கும் ஏற்படப் போகும் பேராபத்தைப் பற்றிச் சிந்தித்துத் தீர்க்கமாக ஆராய்ந்து, தமிழினத்தின் தன்மானத்தைக் காக்கும் ஒரே கட்சியான தமிழரசுக் கட்சி தனது அரசியல் மாநாட்டில் எடுத்த உறுதியான முடிவுகள் ஆட்சியாளருக்கும், ஆட்சியாளரின் அடிவருடிகளுக்கும், அடிமைப் புத்திகொண்டோருக்கும் இனத்தை விற்று வயிறு வளர்க்கும் துரோகிகளுக்கும் அடிவயிற்றைக் கலக்கத் தொடங்கிவிட்டன; தமிழினம் விழிப்படைந்துவிட்டால்; தன்னினத்தை, தன் மொழியைத் தன் பண்பாட்டை, காக்க தமிழன் துணிந்துவிட்டால், எதையும் தியாகஞ் செய்யத் தயாராகி விட்டால், சுதந்திரத்தைப் பேண முற்பட்டுவிட்டால், துரோகிகளுக்கும், துடைநடுங்கிகளுக்கும், அடிவருடிகளுக்கும், அன்னக்காவடிகளுக்கும். (தணிக்கை) இடமில்லாமற் போய் விடுமே என்று அஞ்சி அரற்றுகின்றனர்.

தணிக்கை..........

அந்த நோக்கத்தை நிறைவேற்றுவதற்காக, வீட்டைக் கொள்ளையடிக்கவரும் திருடன் நாய்க்குக் கருவாடு போடுவதுபோல ..........;

தணிக்கை;..........

..................பட்டம் பதவி என்னும் எலும்புத் துண்டுகளைப்போட அதைப் பொறுக்கும் துரோகிகளும் ஆட்சியாளருக்குத் துதிபாடுகின்றனர்;

புதிய அரசியலமைப்பில் பெளத்த மதத்திற்கும் சிங்களமொழிக்குமே முதன்மை வழங்கப்பட்டுள்ளது; பெரும்பான்மையினத்தின் மதத்தையும் மொழியையும் யாரிடமிருந்து பாதுகாப்பதற்காக அரசியல் திட்டத்தில் அவற்றின் பாதுகாப்பிற்குத் திட்டவட்டமான சட்டமியற்றப்பட்டுள்ளது; பெரும்பான்மையினத்தைச் சிறுபான்மையினம் விழுங்க முடியுமா?

ஆங்கிலேயருடைய ஆட்சி இந்நாட்டில் ஏற்படுவதற்கு முன் தமிழர் தமது மாநிலத்தையும், சிங்களவர் தமது மாநிலத்தையும் தனித்தனியே தமது மொழியில் ஆட்சி செய்தனர். அதனால் வளமுடன் சுதந்திரமாக வாழ்ந்தனர்; ஆங்கிலேயர் இந்நாட்டை அடிமைகொண்டபின் நிர்வாக வசதிக்காக தமிழ் மாநிலத்தையும், சிங்கள மாநிலங்களையும் ஒரே ஆட்சியின் கீழ்க் கொண்டு வந்தனர்; அன்றுதான் தமிழினத்திற்கு அழிவு தொடட்டது.

ஆங்கிலேயர் காட்டிய உத்தியோக மோகத்தால் தமிழர் தமது நாட்டைச் சிறிய விட்டனர். ஆட்சியாளரின் அலுவலகங்கள் இருந்த கொழும்புமாநகரை நோக்கி உத்தியோக வேட்டைக்காகப் படையெடுத்தனர். அதனால் தமிழ் மாநிலத்திலே தனி இனமாக வாழ்ந்த தமிழர் சிங்கள மாநிலத்தினுள்ளும் சிதறுண்டு வாழலாயினர்.

ஆங்கிலேயர் தமக்குத் தேவையான தேயிலை, றப்பர், கொக்கோ போன்ற பொருட்களை உற்பத்தி செய்து இந்நாட்டின் வளத்தைச் சுரண்டத் திட்டமிட்டனர். அதனால் மலையகத்தில் தேயிலை றப்பர்த் தோட்டங்கள் உருவாயின. அவற்றில் கூலிவேலை செய்ய இந்தியத் தமிழகத்திலிருந்து தமிழரை இறக்குமதி செய்தனர்; அதனால் மலையகத்திலும் தமிழர் குடியேறினர். தாழ்ந்த பகுதிகளாகிய வடக்கு, கிழக்கு மாகாணங்களில் உணவு உற்பத்தி கைவிடப்பட்டது. வெளி நாடுகளிலிருந்து அரிசியும், மாவும் வந்து குவிந்தன. அதனால் விவசாயத்தையும் கைவிட்ட தமிழர் வியாபாரத்திற்காகச் சிங்கள நாட்டிற்குச் சென்றனர். உத்தியோகத்திற்காகக் கொழும்புக்குச் சென்ற தமிழர் அடிமைத் துரைமார்களாகக் கொழும்பில் குடியேறினர். தமிழ் மாநிலத்தை மறந்தனர்;

ஆங்கிலம் படித்த அடிமைத் துரைமார்களின் அற்ப புத்தியால் அனைத்தும் ஆங்கிலத்தில் தான் செய்ய முடியும்; தமிழால் எதையும் சாதிக்க முடியாதென்ற எண்ணத்தை ஆங்கிலம் படிக்காத தமிழ் மக்களின் உள்ளங்களில் ஏற்படுத்தினர்; இதனால் ஆங்கிலம் படிக்காத தமிழ் மக்களும் தமது காரியங்களைச் செய்து முடிக்க ஆங்கிலம் படித்தவர்களின் தயவை நாடினர். இதனால் அவர்களுடைய மனதில் தாழ்வு மனப்பான்மை தலையெடுத்தது. அடிமைப் புத்தி மேலோங்கியது; அடிமையாக வாழ்வதே சுகம் என்று நம்பினர்.

இந்திய உப கண்டத்தில் ஏற்பட்ட விடுதலை உணர்வால், ஆட்டங் கண்ட ஆங்கில ஆட்சி இந்தியாவுக்குச் சுதந்திரம் வழங்கிவிட்டுச் செல்லும்பொழுது சும்மாயிருந்த இலங்கைக்கும் சுதந்திரத்தை வழங்கியது. சுதந்திர உணர்வற்றிருந்த தமிழர், தமது மூதாதையர் தனி நாட்டில் தனியரசு நடத்தியவர் என்பதை மறந்துவிட்டனர். அதனால் ஆங்கிலேயன் இந்நாட்டைவிட்டு வெளியேறும் பொழுது அவன் இந்நாட்டைக் கைப்பற்றும் பொழுது இருந்த தமிழரசைப்போல் ஒரு தனியரசு தமக்கு வேண்டுமென்று கோரத் தமிழர் தவறிவிட்டனர். அதனால் ஒற்றையாட்சியில் சிங்கள மக்களுடன் தமிழ் மக்களும் பிணைக்கப்பட்டு சிறுபான்மையினமாக்கப்பட்டனர்.

ஆட்சியதிகாரத்தைக் கைப்பற்றிய சிங்களவர் அகில இலங்கையும் தமக்கே சொந்தமென்று உரிமை பாராட்டத்தொடங்கிவிட்டனர். அதற்குத் துணையாக அகழ்வாராய்ச்சிகள் செய்து அதிகாரபீடத்தின் உதவியுடன் சிங்களவர் இலங்கைக்கு வருவதற்கு முன்பே தமிழர் வாழ்ந்த இடங்களைக் கூட, புத்த[illegible] [illegible]களைப் புதைத்[illegible] [illegible]கள நாடென்று நிலைநாட்டத் தொடங்கிவிட்டனர்.

இன்று படிப்படியாகத் தமிழ் மாநிலங்களினுள் ஊடுருவுகின்றனர்; இதனால் தமிழ் மாநிலங்களிற் கூடத் தமிழர் சிறுபான்மையினமாக்கப் படக் கூடிய பேராபத்தை எதிர் நோக்கியுள்ளனர்; இன்று இலங்கையொரு சிங்கள நாடு; அது சிங்களவருக்கே சொந்தம்; தமிழர் கள்ளத் தோணிகளி..........

தணிக்கை..........

கறையான் புற்றெடுக்கப் பாம்பு குடிபுகுந்ததைபோகத் தமிழர் அமைத்த தமிழ் மாநிலத்தில் சிங்களவர் குடியேற்றப்படுகின்றனர்.

சிங்களம் இந் நாட்டின் ஆட்சி மொழியாக்கப்பட்டு விட்டது. புதிய அரசியல் திட்டத்திலும் சிங்களம் மட்டும் சட்டம் பூரணமாக உறுதிப்படுத்தப்பட்டுள்ளது: ஆட்சி மொழியில் நிர்வாகத்தை அமுல் நடத்த உத்தியோகத்தர்களுக்குச் சிங்கள அறிவு அவசியம். சிங்களத்தைத் தாய் மொழியாகக் கொண்டு கல்வி கற்ற பெரும்பான்மையின மக்கள், வேலையற்றிருக்க, சிங்களம் ஆட்சி மொழியாகவுள்ள நாட்டில் சிங்களம் தெரியாதவர்களுக்கு வேலை எப்படிக் கிடைக்கும்; இதனால் சகல உத்தியோகங்களும் சிங்கள மக்களுக்கே கொடுக்கப்படும் காலம் வெகு தூரத்திலில்லை;

ஆட்சி மொழியாகிய சிங்களத்தைப் படித்தால் உத்தியோகம் கிடைக்கும், உத்தியோக உயர்பு கிடைக்கும் என்ற நப்பாசையால் தமிழர் சிங்களத்தை ஒருபாடமாகக் கற்க முற்படுவர்;

## 'யாழ் வேந்தன்'

புதிய அரசியல் திட்டத்தில் ஒவ்வொரு பிள்ளைக்கும் அதன் தாய் மொழியிலேயே கல்வி புகட்டப்படவேண்டுமென்று வரையறுக்கப்படவில்லை. அவ்வாறு செய்யவேண்டுமென்று தமிழரசுக்கட்சி அரசியல் நிர்ணய சபையில் வாதாடிய போதும் சிங்களப் பெரும்பான்மை அவர்களுடைய திருத்தப் பிரேரணைகளைத் தோற்கடித்துவிட்டது. அத் தீர்மானத்தைத் தோற்கடித்த சிங்களவரின் அடிப்படை நோக்கமென்ன? தமிழ்ப் பிள்ளைகளுக்கு அவர்களுடைய தாய் மொழியில் கல்வி புகட்டப்பட வேண்டுமென்று சட்டத்தில் வரையறை செய்யப்பட்டால்,

தணிக்கை..........

.............................. நோக்கத்தை நிறைவேற்ற முடியாமற் போய்விடுமேயென்பது தான்; இந்த அரசியல் திட்டத்தைத் தமிழ் மக்கள் ஏற்றுக் கொண்டால் தமிழ்ப் பிள்ளைகளுக்குச் சிங்களம் போதனு மொழியாக்கப்படும். இதனால் தமிழினம் பெரும்பான்மைச் சிங்கள இனத்தால் விழுங்கப்பட்டுவிடும்;

பாகிஸ்தானில் ஆட்சியதிகாரம் சிறுபான்மையினரின் கையில் இருந்தது; அந்த அதிகாரமமதையால் பெரும்பான்மையினத்தையே அழித்தொழிக்கத் திட்டமிட்டனர் ஆனால் இலங்கையிலோ ஆட்சியதிகாரம் பெரும்பான்மையினத்திடமேயிருக்கின்றது;..............................

தணிக்கை..........

பாகிஸ்தான் அரசாங்கத்தில் கிழக்கு வங்க மக்களில் சிலர் மந்திரியாக இருந்திருக்கின்றனர். ஒரு சிலர் மந்திரியாவதால் அம்மக்களுக்கு ஆட்சியில் பங்குண்டென்று அர்த்தமாகாது. அதேபோலத்தான் இலங்கையிலும் சில கால கட்டங்களில் சிங்கள அரசில் ஒரு சில தமிழர் மந்திரிகளாக இருந்திருக்கின்றனர். அதனால் தமிழ் மக்களும் இலங்கை அரசில் சம பங்காளிகள் என்று கூறிவிட முடியாது: இன்று கூட மாண்புமிகு அமைச்சராகத் திரு. செ. குமாரசூரியர் விளங்குகிறார்; ஆனால் தமிழ் மக்களின் மொழியுரிமையாவது கிடைத்திருக்கிறதா? இல்லை! அதற்குப் பதிலாக அவருக்குக் கீழுள்ள அமைச்சில்தான் தீவிர தமிழ் ஒழிப்பு நடைபெறுகின்றது. தமிழ் அமைச்சர் தமிழ் மாநிலங்களுக்கு ஏதாவது நன்மை செதிருக்கிறாரா? தமிழ்துரோகிகளுக்குச் சமாதான நீதிபதி பட்டம் வாங்கிக் கொடுப்பதும், ஒரு சிலருக்கு உத்தியோகம் எடுத்துக் கொடுப்பதும், சிலருக்கு இடமாற்றம் பெற்றுக் கொடுப்பதும் தான் அவர் தமிழருக்குச் செய்யும் மாபெரும் சேவை;

தமிழ் நாட்டில் என்ன இருக்கிறது? முருங்கைக்காய் தானு தமிழ் மாநிலத்தின் மூலவளம் என்று கேலி பேசுகின்ற சோசலிசத் தோழர்களே தமிழ் நாட்டில் என்ன இல்லை? என்று நாம் கேட்கிறோம். உணவு உற்பத்திக்கு வேண்டிய நிலவளமில்லையா? கடல்வளமில்லையா? வரண்ட பாலைவனத்தில் இஸ்ரேல் நாடு இன்று வளமுடன் வாழமுடியுமென்றால் தமிழ் மாநிலத்தால் வாழமுடியாதா? குழாய்கள் மூலம் நீர் பாய்ச்சி இஸ்ரேலில் பயிர் வளர்க்கவில்லையா?

இலங்கைக்குப் பொருளாதார வளத்தை அள்ளிக் கொடுக்கும் தேயிலையும், றப்பரும் சிங்கள நாட்டில் தானே இருக்கின்றன என்று வாய்ச்சவடால் அடிக்கும் தோழர்களே உலக சந்தையில் தேயிலை, றப்பரின் விலை வீழ்ச்சியடைவதையும், ஏனைய நாடுகள் இலங்கையுடன் இப்பொருள் வியாபாரத்தில் போட்டியிட்டு முன்னேறுவதையும் நீர் அறியவில்லையா? செயற்கை றப்பர் உற்பத்தி பெருகிவரும் இந்நாளில் இன்னும் எத்தனை காலத்திற்கு றப்பரால் இலங்கையின் பொருளாதாரத்தைப் பெருக்கப் போகின்றீர்கள். அன்னாசிப் பழம், ஓக்கிட் பூக்கள் போன்றவற்

(9-ம் பக்கம் பார்க்க)

# தமிழ் ஐயா!

செந்தமிழ் ஆசிரியர் கூட்டமொன்று
திருமலையில்! அடியேனும் சென்றிருந்தேன்!
வந்திருந்தார் ஐயாமார், செந்தமிழ்க்கு
வழிகாட்டி பேரன்றோர்கள்! வந்தபின்னுள்
வந்ததுகாண் வட்டாரக் கையொப்பத்தாள்!
வைத்திருந்தார் ஒப்பங்கள் ஆங்கிலத்தில்!
வெந்தது காண் என் நெஞ்சம் அதனைக்கண்டு
வெந்தென்ன? செத்தென்ன? வைத்தார் —
போனர்!

சிங்கள நல் ஆசிரியர் கூட்டமென்றால்
திட்டுவார ஒப்பங்கள் ஆங்கிலத்தில்?
சிங்களத்திலேயன்றோ இட்டிருப்பார்!
செந்தமிழர் வெள்ளையராய்த்திகழ்வதேனோ?
அங்கவர்க்கு அவர் மொழியில் அசையாப்பற்று!
அதுதானே நம் ஐயாமாருக்கில்லை!
இச்சிறிவைகள் சிறிதென்பார் இவர்கள்! ஆனால்
இவையெல்லாம் அவர்கட்குப் பெரிது கண்டீர்!

தமிழ் மண்ணில் தமிழ்த்தாய்க்கு மகனாய் வந்து
தமிழ் கேட்டுத் தமிழ்பேசித் தமிழ்ப்பாலுண்டு
தமிழ்ப்பள்ளிதனிற் சென்று தமிழ் நூலோடு
தமிழ் வாத்தியார் மூலம் தமிழேகற்று
தமிழ் ஐயா ஆகிப்பின் தமிழ்ப்பிள்ளைக்குத்
தமிழ்ப்பாடசாலையிலே தமிழ் கற்பிக்கும்
தமிழ் வாத்தி எனும் பச்சைத் தமிழன் ஐயோ,
தமிழாலே கையொப்பம் இடும் நாள் எந்நாள்?

தமிழ் எங்கள் தாயென்ற கருத்திருந்தால்
தமிழாசிரியர் யாம் என நினைத்தால்
தமிழ் எங்கள் மூச்சென்று கொண்டிருந்தால்
தமிழ்மீது அசையாத பற்றிருந்தால்
தமிழ் எங்கள் விழி என்றும் — தமிழ் அழிந்தால்
தமிழ் இனமே இல்லை என்றும் உணர்ந்திருந்தால்
தமிழ் இன்று படுகின்ற பாடறிந்தும்
தமிழ்ப் பகைவர் ஆவாரோ? தமிழ் ஐயாமார்

நம்மொழியை, நாம் பேணவிட்டால், மற்றோர்
நம்மொழியை மதிப்பாரோ? நாம் கெடுத்தால்
நம் மொழியை, மற்றோர்கள் நலம் செய்வாரோ
நம்மொழியை நாம் அடிமைப்படுத்திக்கொண்டு
நம்மொழிக்கு நாம் உரிமை கேட்கலாமோ?
நாம் அன்றோ முதல் உரிமை கொடுக்கவேண்டும்!
நம் மொழியில் நாம் எழுத நமக்கேன் அச்சம்?
நம் நிலைமை உணர்வாரோ நம் ஐயா மார்?

தமிழ் ஐயா, தமிழை வதையாதீர் ஐயா;
தமிழாலே எழுதுமையா, பேசுமையா!
அமிழ்தையா அது நமக்கு! அதுவே எங்கள்
ஆவியையா, விழியையா! அஃதென்னும்
கமழ்கின்ற மலரையா, கற்கண்டையா!
கரும்பையா, தேனையா! கழித்தாலஃதை
உமிழ் வரையா ஒரு காலம் உதைத்தார்கள்!
உண்மையையா இனியேனும் உணர்வீர் ஐயா!

'தாமரைத்தீவான்'

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விமர்சனத்தை விமர்சிக்கின்றேன்!

24-2-72 (வியாழக்கிழமை) வெளியாகிய தினபதிப் பத்திரிகையைப் பார்த்ததும் ஒரே ஆச்சரியம். ஏனென்றால் மாணவர்களின் ஆர்வத்தில் பரிணமித்த பயணம் என்னும் தலைப்பில் மாசி மாதம் 19-ம் 20-ம் திகதிகளில் பம்பலப்பிட்டி சரஸ்வதிமண்டபத்தில் கொழும்பு பல்கலைக்கழகத் தமிழ்ச் சங்கத்தின் "பயணம்" எனும் நாடகத்தைப் பற்றி எழுதிய விமர்சனத்தை என்னால் நம்பவே முடியவில்லை; தெரியாமல்தான் கேட்கிறேன். நாடகத்தைப் பற்றி விமர்சனம் எழுதியவர் நாடகத்தைப் பார்த்துத்தானா எழுதினார்; அல்லது மற்றவர் சொல்லக் கேட்டு எழுதினாரா? நாடகத்தைப் பார்த்திருந்தாலும் சரி, பாராமல் மற்றவர் சொல்லக் கேட்டிருந்தாலும் சரி உண்மையான தன்மானத் தமிழன் பயணம் எனும் நாடகத்திற்கு விமர்சனம் எழுதியிருந்தால் இப்படி எழுதியிருக்கமாட்டான் (தினபதியில் வெளியானது)

நாடகத்தில் நடித்த எவரிலுமே குறை சொல்ல முடியாது. ஒவ்வொருவரும் தங்கள் பாத்திரங்களைத் தங்களால் இயன்றளவு சிறப்பாக நடித்துள்ளார்கள்; இன்றைய சூழ்நிலையில் அதுவும் தமிழினம் பின்னுக்குத் தள்ளப்பட்டுக் கொண்டு வரும் இந்நேரத்தில் சமுதாயத்திற்குத் தேவையான, அதுவும் முக்கியமாக இன்றைய வாலிப சமுதாயத்திற்குத் தேவையான கருத்தை மையமாக வைத்து. தேனிலும் இனிய தமிழைத் தாய் மொழியாகக் கொண்ட எவனும் உலகின் எந்தப் பாகத்தில் வாழ்ந்தாலும் அவர்கள் எல்லோரும் தமிழ்த் தாயின் அருந்தவப் புதல்வர்கள். எல்லோரும் தமிழர்கள் என்ற உண்மையை எடுத்துக் காட்டியுள்ளார் கதாசிரியர். ஆனால் வழக்கமாகவே வடக்குத் தமிழன் கிழக்குத் தமிழன் என இலங்கையிலேயே பிரித்துப் பேசும் தினபதியாருக்கு இந்நாடகத்தைக் கண்டவுடன் குலைநடுக்கம் ஏற்பட்டுவிட்டது. எங்கே மலையகத் தமிழரும் வடகிழக்குத் தமிழரும் ஒன்றுபட்டு விடுவாரோ என்ற பயம் பிடித்துவிட்டது போலும்.

நாடகத்தில் நடித்தவரில் தான் குறையுண்டு. முடிவு கல்யாணத்தில்முடியவில்லையே என யோசிக்கிறாரோ! ஆனால் கல்யாணத்தில் முடியாததினால் தான் எம் அனைவருக்கும் இன்றைய தமிழ்ச் சமுதாயத்திற்கு நடப்பதை சுயமாகவே சிந்திக்க வைத்திருக்கிறார் கதாசிரியர். மற்றது இராமசாமியாக நடித்த பொன் சத்தியநாதன் இந்திய பேச்சுத் தமிழை ஏனோ மறந்து விட்டார் என தினபதியார் குறிப்பிட்டிருந்தார். தினபதியாரைப் பார்த்து ஒன்று கேட்க விரும்புகிறேன்; நீர் எவ்வளவு காலம் யாழ்ப்பாணத்தில் இந்தியத் தமிழருடன் பழகி இருக்கிறீர்? அவர்களுடன் நீர் கதைத்திருக்கிறீரா! நாடகத்தில் இராமசாமியின் பேச்சைக் கேட்கும்போது எனக்கு எனது ஊரில் உள்ள இந்தியத் தமிழரின் பேச்சுத் தான் ஞாபகம் வந்தது.

நடராசாவாக நடித்தவரை நாடகம் பார்க்க வந்த எல்லோருமே மிகவும் புகழ்ந்தார்களே அது தினபதியார் காதில் விழவில்லையா? அது மட்டுமா எத்தனையோ பேர் நாடகம் முடிந்தவுடன் அவருக்குக் கையைக் குலுக்கி அவரின் நடிப்பை மெச்சினார்களே அதுகூடவா தினபதியார் கண்ணில் படவில்லை. எல்லோரையும் வயிறு குலுங்கச் சிரிக்க வைத்து, சிந்திக்கச் செய்து விட்டாரே — கொழும்பில் சோற்றுக்கடை எப்படி நடத்துகிறார்கள் என்பதையும் மாணவர் எப்படிக் காலம் தள்ளுகிறார்கள் என்பதையும், மரவரி ரத்து முறையைப் பற்றியும் சிரிப்போடு சிந்திக்க வைத்துள்ளாரே நடராசாவாக நடித்தவர். இக்கருத்தை எழுதியவர் கதாசிரியர் தானே: தரப்படுத்தல் என்னும் போர் வையால் பல்கலைக் கழகத்திற்குப் போக முடியாமற் போனதாக ஒரு பாத்திரம் சிருஷ்டிக்கப்பட்டிருந்தது தினபதியாருக்கு எரிச்சலை மூட்டியதா?

சுகவீனம் காரணமாகச் சிகிச்சைபெற வந்த நான் சந்தர்ப்ப வசத்தால் 19-ம் திகதி 'பயணம்' நாடகத்தை பார்க்க சந்தர்ப்பம் கிடைத்தது. ஆனால் நாடகத்தைப் பார்த்ததும் என் ஆவலை அடக்க முடியவில்லை. மறு நாளும் அந்நாடகத்தைச் சென்று பார்த்தேன்.

தரமான நாடகம், தகுதியான நாடகம், கருத்துக்கள் நிறைந்த நாடகம். பார்த்த அனைவரையும்சிந்திக்கவைத்த நாடகம். தினபதியாருக்குறைகள் கண்டதற்குக் காரணமே புரியவில்லை. தினபதியாரே தயவு செய்து தரமான நாடகங்களைத் தரமாகவே விமர்சிக்கவும்.

வாழ்க நாடகத் தமிழ்.

— கரவையூர் ஜீவா.

## மக்கள் குரல்

அன்பின் சுதந்திரன் ஆசிரியர் அவர்கட்கு!

ஐயா,

கட்சிக்கட்டுப் பாட்டையே மீறி கட்சி தலைவரின் சொல்லையே கேட்காது தான் தோன்றித் தனமாக நடந்து அரசாங்கத்துடன் சேர்ந்து தமிழ் மக்களுக்கு துரோகம் இழைத்து வரும், பெயரளவில் த. கா. எம்பியென்று கூறிக் கொள்ளும் அடுப்புக்கட்டிகளில் ஒன்று தமது மூத்த தலைவர் யாழ்ப்பாணம் சென்றபோது அவரை வரவேற்கக் கூட செல்லாது தமிழரசுக்கட்சியினரை பிரதமரை திரு. ஜீ. ஜீ. பொன்னம்பலத்துடன் அவரின் தலைமையில் சந்திக்கவேண்டுமென்று கேட்கின்றார். இவருக்கு இனி திரு. பொன்னம்பலம் பற்றி பேசவோ தமிழரசுக்கட்சி பற்றி பேசவோ என்ன உரிமை இருக்கின்றதோ தெரியவில்லை.

தமிழ் மக்களின் உரிமைகளை நாங்கள் கேட்டு பெற பிரதமருடன் கதைப்பதற்கு இவருக்கு முடியாதா? அப்படியாயின் இவருக்கு எம். பி. பதவி எதற்கு.

மானத்திலும் உயிர் மேலானது என மதித்து மாற்றாருக்கு அஞ்சி நடுங்கி அடிமையாய் வாழும் இவர்களைப் போன்றோருக்கு...

மரணம்நேரிடினும் மானம் தான் பெரிது என்று மதித்து அவ்வழியில் தவறாது, தயங்காது சோராது நடக்கும் எமது கட்சியினரைப் பற்றிப் பேச என்ன அருகதையுள்ளது;

வீரத்தின் இருப்பிடமாய் மானத்தின் உறைவிடமாய் விளங்கிய பண்டைய யாழ்ப்பாண மன்னர்கள் பிறந்த மண்ணிலே பிறந்த இந்த மனிதர்கள் மயிர் நீப்பின் வாழாக்கவரிமான்— அனைய வீரத்துடன் வாழாமல் கேவலம் பட்டம் பதவிகளுக்காக மாற்றானை மண்டியிட்டு வாழ்வதை நினைத்தால் மனம் வேதனை அடைகின்றது.

முந்தையர் வீரத்திற்கு முன்னோர் மானத்திற்கு அவர் ஏற்றிய புகழ்கொடிக்கு ஊறு செய்யாது இனியாவது இவர்கள் திருந்துவார்களா!

குரும்பசிட்டி,
கந்தையன்.

●

அன்புள்ள ஆசிரியருக்கு,

தங்களது 27-2-72 இதழ் சுதந்திரனின் தலையங்கம், தரமானது. தடுமாறும் தமிழர்களுக்கு, தலையாய மாமருந்து. அதில் பல விடயங்கள் தணிக்கையானாலும், அதை கத்தரித்து, பத்திரப்படுத்தி வைத்திருக்கிறேன். அது என் மனதை தொடுகிறது.

உலக விடுதலை கிளர்ச்சிகளின், வரலாற்றை ஜீரணித்து ஈழத்தமிழினத்தின் விடுதலை நிகழ்ச்சிகளில், அழுந்தி லயிக்கின்ற ஒரு உருவத்தினால் மட்டுமே இத்தகு உயிரோட்டமுள்ள தலையங்கத்தை தீட்டமுடியுமென்பது என் திடமான கருத்து.

தலைவர்களென்னும் தரங்கெட்ட ஈனப்பிறவிகளை விட, விடுதலை உணர்வுமிக்க தன்மான அடிமட்ட தொண்டர்களின் ஒற்றுமை மேல் என எண்ணுமிடம் என் நெஞ்சை நெகிழவைக்கிறது.

தன் நலம் காக்கும் சுகபோக, சுயநலப் பிறவிகளையும், தமிழ் நலம் காக்கும் தன்மான தலைவர்களையும், இனங்கண்டு கொள்ள முடியாமல் தவிக்கின்ற தமிழினத்தை என்ன சொல்லி தேற்றுவதென்று திகைக்கிறேன்.

பல்கலைச்செல்வர், தெ. பொ. மீயின் ''தமிழகத்திற் கப்பால் தமிழனின் செல்வாக்கு'' இதழுக்கு மணம் கூட்டுகிறது.

வணக்கம்

— இ. சதீரவேந் பிள்ளை

●

யாழ்ப்பாணத்தில் கடந்த தமிழ் அரசுக் கட்சியின் சிறப்பு மாநாட்டுக்குப் பின் விடுதலை உணர்ச்சி புத்துயிர் பெற்றிருக்கிறது. அரசியல் விபசாரம் புரியும் ஒரு சில அரசியல்வாதிகள் பலருக்கு குலைப்பன் காய்ச்சல் மாநாட்டுக்குப்பின் ஏற்பட்டிருக்கிறதென்பதில் ஐயமில்லை;

விடுதலை உணர்வென்பது நீறு பூத்த நெருப்பாக தமிழ் இனத்திடம் மண்டிக்கிடக்கிறது. சில நாளைய பிரசாரம் போதும்; அது கொழுந்து விட்டெரிய என்னும் உண்மையை சிறப்பு மாநாடு நிரூபித்திருக்கிறது;

மாநாட்டுக்கு வந்தவர்கள் தொண்டு கிழவர்களல்லர், பள்ளிக்குப்போகும் துள்ளும் பருவத்தினர். இன்றைய சந்ததி சளைத்துப்போனாலும் நாளைய சந்ததி விட்ட இடத்திலிருந்து விடுதலைப் போரை தொடங்கும் என்ற நம்பிக்கையை மாநாடு நிரூபித்திருக்கிறது:

குமாரசூரியருக்கு அளித்த வரவேற்பு பிசுபிசுத்தமைக்கு முக்கிய காரணம் சிறப்பு [illegible] துக்கு எதிராக [illegible] டுத்துவிட்ட [illegible] எழுப்புத் தான். அரசியல் சாசனத்தில் கையெழுத்துப் போடுவதுபற்றி எட்டப்பர் கூட்டம் ஒரு முறைக்குப் பத்து முறை இப்போது யோசிக்க வேண்டிய நிர்ப்பந்தத்துக்குள் மாநாடு அவர்களை தள்ளியிருக்கிறது.

தமிழ் அரசுக் கட்சித்தலைவர்கள் மக்களிடையே தூண்டிவிடப்பட்டுள்ள புது வேகத்தை பக்குவமாகப் பயன்படுத்தவேண்டும். சரியான திட்டம் வகுக்கப்பட்டு அஃது கச்சிதமாக நிறைவேற்றப்படவேண்டும். புதிய அரசியல் திட்டத்தில் உள்ள ஆபத்துக்களைப்பற்றி, பகிரங்ககூட்டங்களில் இல்லாவிட்டாலும், சிறு சிறு கூட்டங்களிலாவது விளங்கப்படுத்தப்பட வேண்டும்.

தமிழ் மாணவமணிகள், மொழிவழித் தொழிற்சங்கங்கள் இந்தப் பிரசாரப் பணியை ஏற்றுக்கொள்ள வேண்டும். எல்லாம் கட்சி செய்யவேண்டுமென்று காத்திராமல் நாம் எதைச் செய்ய முடியுமோ — எவற்றைச் செய்யவேண்டுமோ அவற்றை நாம் செய்தேயாக வேண்டும்;

விடுதலை இயக்கமென்பது சூரபதுமன் மாதிரி— வெட்ட வெட்ட தழைக்கும்! அடக்க அடக்க விஸ்வரூபம் எடுக்கும்!! அதுமட்டுமல்ல விடுதலைப் போர் முழக்கம் கேட்டால் எட்டப்பர் கூட்டம் அண்டர்கிறவுண்ட் ஆகிவிடும். வங்கம் வழிகாட்டியது. நாமும் அவ்வழி நடக்க தயாராவோம்!

—இளங்கோ

# தமிழனே விழித்தெழு!

ஆசிரியர்
சுதந்திரன்

தமிழ் காங்கிரஸ் பா: உ: கள் புதிய அரசியல் திட்டத்தை ஆதரித்து கையெழுத்திடப் போவதாக ஒரு பத்திரிகையில் செய்தி வெளிவந்ததைக் கண்டு அதிர்ச்சியடைந்தேன். ஏனெனில் தமிழன் இன்னும் அடிமைகளாக அவரின் எதிர்காலம் மேலும் மேலும் இருள் சூழ்ந்ததாக இருக்கவேண்டுமென்று விரும்புகின்றார்கள் போலும் இவர்கள்.

தமிழ் மக்களே முக்கியமாக தமிழ் காங்கிரஸ் பா. உ. களை பாராளுமன்றத்திற்கு அனுப்பி வைத்த மக்களே; உங்களுக்கு முக்கியமான அதுவும் புனிதமான, தமிழனின் எதிர்காலச் சுபீட்சத்துக்கு வித்திடுகின்ற பணியொன்று காத்திருக்கின்றது. அது என்னவென்றால் நீங்கள் அனுப்பி வைத்த பா. உறுப்பினர்கள் புதிய அரசியல் சாசனத்தை ஆதரித்து அதில் கையெழுத்திடாமல் செய்யவேண்டியது. ஏனெனில் இவர்களும் கையொப்பமிட்டுவிட்டால் அதன் பின் தமிழனுக்கு என்றும் விமோசனம் கிடையாது. அவனின் எதிர்காலம் நிச்சயம் இருள் சூழ்ந்ததாக இருக்கும் என்பதில் ஐயமில்லை. எனவே தமிழன் தன்மானம் மிக்கவன் என்றும் ஊமையாக இருக்கமாட்டான் என்பதை எடுத்துக் காட்டும் முகமாக எல்லாத்தமிழ் பா. உறுப்பினர்களும் ஒன்றாகச் சேர்ந்து இந்த அரசியல் திட்டத்தை பகிஷ்கரிக்க வைக்கவேண்டியது தமிழ் மக்களின் தலையாய புனிதமான கடமையாகும்.

ஆகவே நீங்கள் அனுப்பி வைத்த பா. உறுப்பினர்களைச் சந்தித்து அவர்களை இச்சாசனத்தில் கையொப்பமிடக் கூடாதென்று கேளுங்கள். உங்கள் இந்த வேண்டுகோளுக்குச் செவி சாய்க்காமல் அச்சாசனத்தில் கையெழுத்திடத்தான் போகிறோமென்றால், நிச்சயமாக எமது தமிழினத்துக்கு, தமிழனின் எதிர்காலச் சுபீட்சத்துக்கு தடைகளாக இருக்கின்ற தீய சக்திகளை அழித்தொழிக்கவேண்டியது தான்; வேறு வழியில்லை; 27 மில வங்காளிகள் தமது ஒற்றுமையைப் பலப்படுத்துவதற்காக முக்கியமாகச் செய்த முதல் வேலை என்னவென்றால் தமது ஒற்றுமைக்கு வேட்டுவைக்கின்ற தமது போராட்டத்துக்கு களங்கத்தை உண்டாக்குகின்ற தீய சக்திகளை வரைவிடாமல் அஸ்தமிக்கச் செய்ததுதான். அதன் பின் தான் அவர்கள் ஒற்றுமையாக இயங்கி தமது உரிமையை பெற்றுக்கொண்டார்கள். இதை நாம் மறக்கலாகாது.

அத்துடன் எமது தமிழ்ப் பா. உறுப்பினர்கள் எல்லோரையும் சந்தித்து அவர்கள் எல்லோரும் புதிய அரசியல் திட்டத்தை ஒன்றாகப் பகிஸ்கரிக்கச் செய்வதில் வல்லவ ஒற்றுமை முன்னணி ஊக்கமாக இயங்கி வெற்றி பெற வேண்டும்.

எல்லாத் தமிழ் மக்களும் விழித்தெழுந்து இப் புனித பணியைச் செய்வதில் ஈடுபட்டு வெற்றி காணவேண்டும். அப்போதுதான் எமது தமிழினம் இனிமேலாவது சுபீட்ச வாழ்வை அடையும். அன்றேல் மீண்டும் வேதாளம் முருங்கை மரத்தில் ஏறிய கதையாகத்தான் முடியும்; எனவே தமிழினமே இனியாவது விழித்தெழுந்து எமக்கிடையேயுள்ள சிறு, சிறு பூசல்களை மறந்து கட்சி பேதங்களை மறந்து தமிழ் மக்களின் எதிர்கால நல் வாழ்வு ஒன்றையே குறிக்கோளாகக்கொண்டு இந்தப் புதிய அரசியல் சாசனத்தை ஒற்றுமையாகப் பகிஷ்கரித்து அதில் வெற்றியும் கண்டு எமது தமிழினத்தின் சுபீட்சத்துக்கும் விடுதலைக்கும் பாடுபடுவோமாக.

வாழ்க தமிழினம்
வெல்க பகிஷ்கரிப்பு இயக்கம்

—சி. கணேசலிங்கம்

●

## காட்டிக் கொடுப்பவர்கள் தம்முள் காட்டிக் கொடுத்தனர்

இலங்கைத் தமிழர் அரசியல் வரலாற்றில் காட்டிக் கொடுப்பவர்கள் பலரை நாடு அறியும், நம் தமிழ் மக்களும் அறிவர்;

ஆனால் இவர்கள் தமக்குள் தாமே காட்டிக் கொடுக்கும் கதைகளும் இடம் பெறுகின்றன. தற்போதைய அரசின் கீழ் தமிழினத்தைக் காட்டிக் கொடுக்கும் தனியுரிமை தமதேயெனச் சூளுரைக்கும் முக்காலிகள் மூவருள் இருவர் தம்முள் தாமே காட்டிக் கொடுத்த சம்பவம் ஒன்று கடந்த புரட்டாதி மாதம் இடம்பெற்ற தராதரப் பத்திரமற்ற ஆசிரியர் நியமனத்தின் போது குடாநாட்டில் இடம் பெற்றது; இந்த ருசிகர சம்பவத்தில் ஈடுபட்ட கருங்காலிகள் இருவருக்கும் இந்நியமன விடயத்தில் தாராளமான கோட்டாக்கள் கிடைத்தன: இவர்களில் ஒருவர் பொரிசில் நியமனம் பெற்றவர்களில் ஐவருக்கு (பெண்கள்) அவர்களின் வீட்டிற்கு அருகாமையிலே யுள்ள பாடசாலைகளில் நியமனமும் கிடைத்தது.

சம்பந்தப்பட்ட இரண்டாவது கருங்காலி தமது சகோதரி முறையானவருக்கும் தமது தொகுதியிலேயே இடம் பெற்றுத்தரவேண்டுமெனத் தமது பலம் அனைத்தையும் பிரயோகித்து கல்வி அதிகாரியிடம் முயற்சி செய்தாராம். கல்வியதிகாரியோ சொந்தக்கிராமத்தில் நியமனம் கொடுக்கும் வழக்கம் இல்லையென மறுத்துவிடவே முதலாமவர் இரண்டாவது

(9ம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காலம் காலமாக நாம் காணும் அநீதி! கண்மூடி இருப்பதோ தமிழ்ச் சாதி?

## ஈழவேந்தன் தமிழ் முழக்கம்

ஈழத்தில் தமிழ் இனம் தமிழ் இனமாக தொடர்ந்து வாழமுடியுமா என்ற ஏக்க உணர்வு இன்று நேற்றல்ல தமிழ் இனத்தின் நிலைத்த நல்வாழ்வில் நாட்டம் கொண்ட நல்ல தலைவர்களுக்கு அன்றே ஏற்பட்டதொன்று.

1917ல் சேர் பொன். அருணசலம் இலங்கைத் தேசிய காங்கிரசை தோற்றுவித்த பின்பு தன் அண்ணன் சேர். பொன். இராமநாதனிடம் வாழ்த்துப் பெறச் சென்றபோது இராமநாதன் கூறிய அறிவுரை ஈண்டு சிந்திக்கற்குரியது. "Go ahead but take care you will presently meet with a storm which will hurl you off the chair." (முன்னேறு. ஆனால் கவனமாய் இரு. விரைவில் வீசவிருக்கும் புயல் உன்னையே உனது நாற்காலியில் இருந்து தூக்கி எறியக்கூடும்) சேர். பொ. இராமநாதன் முன் கூட்டி எச்சரித்ததற்கமைய மேல் மாகாணப் பிரதிநிதித்துவம் ஒட்டி சேர். பொன். அருணசலம் சிங்களத் தலைவர்களால் கைவிடப்பட்ட நிலையில் தமிழ் அமைப்பைத் தோற்றுவித்து 'தேசியம் என்ற போர்வையில் தமிழ் இனம் காயுமற்ற கறியுமற்ற சம்பார் நிலைக்கு தன் தனிப் பண்புகளை இழந்து அழிவதற்கு யான் உடந்தையாக இருக்க மாட்டேன் என்று அன்றே முழங்கிய முழக்கம் தமிழ் இனத்திற்கு குழிதோண்டும் முயற்சி அன்றே உருவாக்கப்பட்டுவிட்டது என்பதைத் தான் காட்டுகிறது.

இந்த அடிப்படையிலே தான் சேர். பொன். இராமநாதன் அவர்கள் 1920களின் இறுதிப் பகுதியில் Donoughmore means Tamils no more (டொனமூர் என்றால் இனிமேல் தமிழர் இல்லை) என்று கூறி தமிழ் மக்களுக்கு அழிவைத்தரும் டொனமூர் சட்டத்தை மிக வன்மையாக எதிர்க்க நேர்ந்தது: இவரின் இவ்விமர்சனத்தை செவிமடுத்த அன்றைய இந்திய தூதுவர் திரு. கே. பி. எஸ். மேனன் பின்வருமாறு மொழிந்தார்:

"On that particular occasion when he denounced the Donoughmore Constitution one felt as if a prophet had come from another world opening the eyes, stering the hearts and shattering the illusions of many self complacent individuals"

(அவர் டொனமோர் யாப்பை வன்மையாக எதிர்த்து எமது கண்களைத் திறந்து சிந்தனையைக் கிளறி தன்னில் திறைவெய்திய மக்களின் அறியாமையை சிதறடித்தபோது மேல் உலகத்தில் இருந்து எமக்கு வழி காட்ட ஒரு தீர்க்கதரிசி வந்துள்ளார் என்று எண்ண இடம் கொடுத்தது.)

பின்பு சோல்பரிச் சட்டம் உருவாகியபோது 'Soulbury has come to bury the Soul of the Tamil's (தமிழனின் ஆன்மாவைப்புதைக்க சோல்பெறி வந்துள்ளார்) என்று தமிழ்த் தலைவர்கள் முழங்கிய போதும் இறுதியில் தமிழ்த் தலைவர்கள் அனைவரும் சோல்பெறிச் சட்டத்திற்கு சார்பாகவே வாக்களித்தனர்.

(பம்பலப்பிட்டி சரசுவதி மண்டபத்தில் 'புதிய அரசியல் சட்டம்' பற்றி தமிழ் தொழிற்சங்கங்கள் சார்பில் நடைபெற்ற கருத்தரங்கில் தமிழறிஞர் ஈழவேந்தன் அவர்கள் ஆற்றிய உரைத் தொகுப்பு.)

ஆனால் சில ஆண்டுகளுக்கு முன்பே சோல்பெரி அவர்களே தான் உருவாக்கிய சட்டத்தில் சிறுபான்மை மக்களுக்கு போதிய அரசியல் பாதுகாப்பு அளிக்காதற்கு வருந்துகிறேன் என்று குறிப்பிட்டுள்ளார். சேர். ஐவர் ஜெனிஸ் (Sir. Ivor Jennings) கூட சில ஆண்டுகளுக்கு முன் தான் உருவாக்கிய இலங்கை சட்டத்தில் சிறுபான்மையினரின் நிலையான நலனைப் பேணியது போதாது என்பதை தனது பி. பி. சி. (B. B. C.) உரைத் தொடரில் குறிப்பிட்டுள்ளார்:

மேற்கூறிய நிகழ்ச்சிகள் அனைத்தும் நாட்டில் உருவாக்கப்பட்ட ஒவ்வொரு புதிய அரசியல் அமைப்பும் தமிழ் இனத்திற்குபாதகமாகவிளங்கியதையும் தமிழ் மக்களை காலந்தோறும் சிங்களத் தலைவர்கள் திட்டமிட்டு ஏமாற்றி வருவதையும் எடுத்துக் காட்டுகிறது.

இது மட்டுமல்ல முதலிலே மொழியுரிமையை பறித்த சிங்கள அரசு படிப்படியாக குடியுரிமை வாக்குரிமை நிலவுரிமை மொழியுரிமை தொழில் உரிமை என்று கூறப்படும் எல்லா உரிமைகளையும் பறித்து குற்றுயிராய்த் தத்தளிக்கும் தமிழ் இனத்தை முற்றாக உயிர் நீக்கம் செய்து புதைகுழியில் புதைக்கும் சொற்களால் வருணிக்க முடியாத கொடூரச் செயல்தான் இரு. கொல்வின் ஆர். டி: சில்வாவினால் உருவாக்கப்பட்டுள்ள—புதிய அரசியல் அமைப்பாகும்.

இப்புதிய அரசியல் அமைப்பில் யாம் இதுவரை அனுபவித்து வந்த அற்ப உரிமைகளைக் கூட இழக்கப்போகிறோம். புதிய சட்டத்தில் தமிழனுக்குக் கொடுக்கப்படுவதாகக் கூறப்படும். உரிமைகள் வெறும் மொழிபெயர்ப்புகள் தான்; மொழி பெயர்ப்பு சட்டப்படி செல்லுபடியாகாது இதைக் கொல்வினே ஏற்றுக்கொண்டார். ஆகவே மொழி பெயர்ப்பு என்ற மாய வார்த்தை தமிழின் விழியைப் பெயர்த்து தமிழைத் தமிழனிடம் இருந்து பிரித்து தமிழனை இறுதியில் சிங்களம் பெருவெள்ளத்தில் அமிழ்ந்தச் செய்யும் வஞ்சனை நிறைந்த சூழ்ச்சியே இப்புதிய சட்டமாகும்.

அறிவுடையார் ஆவது அறிவார் அறிவிலார் அஃதறி கல்லாதவர்' 'அஞ்சுவது அஞ்சாமை பேதமை அஞ்சுவது அஞ்சல் அறிவார் தொழில் என்ற வள்ளுவரின் வாய்மொழிகளுக்கமைய இப்புதிய சட்டத்தினால் வருகின்ற ஆபத்துகளை அறிகின்ற அறிவுடையவர்கள் அஞ்ச வேண்டியவற்றிற்கு அஞ்சுகின்ற பண்புள்ளவர்களாக எம்மையாம் ஆளாக்கிக் கொள்ளவேண்டும்:

நோய்நாடி நோய் முதல் நாடி அது தணிக்கும் வாய் நாடி வாய்ப்பச் செயல் என்று மற்றுமோர் இடத்தில் வள்ளுவர் மொழிந்ததற்கமைய இன்று எமக்கு ஏற்பட்டுள்ள அரசியல் நோயின் அடிப்படைக்காரணத்தை உணர்ந்து அந்நோயை முற்றாகத் தீர்க்கும் முயற்சியில் யாம் செயற்படவேண்டும்: மேலெழுந்த வாரியாக யாம் அரசியல் சிக்கல்களைத்தீர்க்க முயலின் அது புதுப்புது உருவம் எடுத்து எமக்கு தொல்லை கொடுக்கும்: எம்மையாம் ஆளுகின்ற அரசியல் அமைப்பை யாம் உருவாக்கினால் அன்றி எமக்கு மீட்சியில்லை:

ஆகவே முதற்படியாக எமது அரசியற் பசியை (Political hunger) நிறைவு செய்யாத இவ்வரசியல் சட்டத்தை முற்றாக நிராகரித்து கிளர்ச்சி செய்யவேண்டும்: 'சொல்லப் பயன்படுவர் சான்றோர் கரும்பு போல் கொல்லப் பயன்படும் கீழ்' என்ற வள்ளுவரின் ஆழ்ந்த உரைக்கு அமைய நிராகரிக்கப்படவேண்டும் இச் சட்டம்' என்று தமிழ் மக்கள் ஒரே மனத்துடன் சொன்னதும் கூற்றிற்கு தமிழ்ப் பிரதிநிதிகள் செவி மடுத்து சொல்லப்பயன்படும் சான்றோராய் விளங்கி இச்சட்டத்திற்கு எதிர்த்து வாக்களிக்கவேண்டும். அப்படி அவர்கள் செய்யாவிட்டால் வள்ளுவர் வழியில் தமிழ் மக்கள் செயல் ஆற்றத் தொடங்கின் முடிவு யாதோ யான் அறியேன்:'

### தமிழ் அமைச்சர்...

(2-ம் பக்கத் தொடர்ச்சி)

ளத்திலேயே கேட்கவேண்டுமென்றும் கூறினாராம்.

மாணவர்கள் அவ் அதிகாரி தமக்குத் தேவையான வற்றைத் தருவதற்கு அவர் மறுக்கவே அங்கு வேலை செய்யும் இன்னொரு தமிழ் கொஞ்சம் கொஞ்சம் தெரிந்த பியோனின் உதவியுடன் காரியத்தைச் சாதித்து வந்தனர். இத்தனைக்கும் அந்த அரசாங்க ஊழியருக்குப் பேச்சுத் தமிழ் கொஞ்சமாவினும் தெரியுமென்பதும் எல்லாருக்கும் தெரிந்ததே: அவருக்கு தமிழ் மக்கள் பேரில் உள்ள துவேஷம் அவரை இவ்வாறு குறிப்பிட வைத்தது. இத் தபாற்கந்தோரின் அதிபர் தமிழர் என்பதும் குறிப்பிடத்தக்கது.

மாணவர்கள் இவ்விஷயத்தை எனக்குத் தெரிவித்ததுடன் இத்தபாற்கந்தோரில் இனி தமிழில் கேட்டு எதுவும் பெறமுடியாதென்றும் இதுவிடயமாகத் தபால் அதிபருக்கு அறிவிக்குமாறும் கேட்டுக் கொண்டனர்.

மாணவர்கள் என்னிடம் கூறியவற்றை அன்றைய தினமே விபரமாக எழுதித் தபாலதிபருக்கு அனுப்பி வைத்தேன். இது விஷயமாகப் பூரண விசாரணை ஒன்று நடாத்துமாறு சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கும் தெரிவித்துள்ளேன்.

மலையகத்தில், கணிசமான அளவு தமிழர் வாழும் கினிகத்தெனையில் ஒருவர் தமது மொழியில் தமக்கு வேண்டியவைதைக் கேட்டுப் பெற முடியாமல் இருப்பதைத் தமிழ் மக்கள் — மலையகத் தமிழர்கள் சிந்தித்துப் பார்க்க வேண்டும். தமிழ் த..ல் அமைச்சர் அவர்களே! தமிழன் இந்நாட்டில் பயமின்றி, அச்சமின்றி, சுயமரியாதையுடன் எங்கும், எந்த நேரமும் வாழலாம் என்பதற்குத் தங்கள் அமைச்சின் அலுவலானரே பட்டைநாமம் சாத்தியதைப் பார்த்தீர்களா!

—'புத்தொளி'

### மும்மூர்த்திகளுக்கு — ஒரு மூடங்கல்!

ஈழத்திலே தமிழினத்தின் எதிர்காலத்தை நிர்ணயிக்க வேண்டியவர்களின் ஒருவராகத் தாங்கள் விளங்குகிறபடியால், தமிழினத்தினதும் தமிழ் மொழியினதும் எதிர்கால நன்மையையே உயிர்நாடியாகக் கொண்ட நாம் இப்பணிவான வேண்டுகோளைத் தங்கள் மேலான கவனத்திற்குச் சமர்ப்பிக்கின்றோம்;

அரசியல் வரலாறுகளை எடுத்துக்கொண்டால், பெரும்பான்மை யினத்தினர் காட்டும் அற்ப தனிப்பட்ட சலுகைகளுக்காகத் தமது இனத்தையே அடிமையாக்கித் துரோகம் செய்த சிறுபான்மையினப் பிரதிநிதிகள் சிறுபான்மை யினத்தவர்களாலேயே வெறுத்தொதுக்கப்பட்டதோடல்லாமல், பெரும்பான்மை யினத்தவர்களிடத்தும் எதிர்பார்த்த மதிப்பை பெறமுடியாமல் தங்கள் தவறை உணர்ந்து மனம் வருந்தி நடை பிணங்களாக வாழ்ந்ததைக் கண்கூடாகக் காணமுடிகிறது;

இலங்கையைப் பொறுத்த வரையில் தமிழினமும், தமிழ் மொழியும் பெரும்பான்மை இனத்தவரால் அழிக்கப்படும் நிலையிலுள்ளன. இந்த அழிவை துரிதப்படுத்துவதற்கான கடைசி ஆயுதமாகப் புதிய அரசியற் திட்டம் உருவாக்கப்பட்டு வருகிறது. உருவாக்கப்பட்டு வரும் அரசியற் திட்டத்தை சிறுபான்மையினத்தவரின் சார்பில் ஒப்பமிட்டு அங்கீகரிப்பதற்காச் சிறுபான்மை இனத்தவரின் பிரதிநிதிகளை ஆளும் கட்சியினர் ஆசை காட்டி வருகின்றனர். இத்தப் போலி ஆசைகளுக்காக அற்ப நாள் அனுபவிக்கும் சலுகைகளுக்காக, தனிப்பட்ட நன்மைகளுக்காக, பெரும்பான்மையினத்தவர் காட்டும் போலிச் சலுகைகளை நம்பி ஓர் இனத்தின் எதிர் காலத்தை ஒரு மொழியின் எதிர் காலத்தைப் பாழாக்கும் இச்செயலைச் செய்ய வேண்டாமெனப் பணிவாகக் கேட்டுக்கொள்ளுகிறோம்.

"'புதிய அரசியற் திட்டம் நிறைவேற்றுவதற்குப் போதிய பலம் அரசாங்கத்திடம் உண்டுதானே ஆகவே, நாமும் சேர்ந்து வாக்களித்தால் என்ன வந்துவிடப் போகிறது'' என எண்ண வேண்டாம். அரசியற் திட்டம் ...

ஆனால், சிறுபான்மையினரின் ஏகோபித்த எதிர்ப்புடன் நிறைவேறியது என்ற பெயரில் நிறைவேறினால், உலக அரசியல் அவதானிகள் மத்தியிலே இலங்கையின் அரசியற் திட்டத்தைப்பற்றி ஒரு தவறான எண்ணம் எழுவதற்கு உதவியாக இருக்கும். இவ்வாறான நிலை ஏற்பட்டால் இலங்கைத் தமிழினத்தோடு சேர்ந்து உலக நாடுகளும் கண்டனக் குரல் எழுப்ப இது வாய்ப்பளிக்கும். ஆகவே, நாங்கள் புதிய அரசியற் திட்டம் நிறைவேறுவதற்கு எதிராக வாக்களிக்க முடியாத நிலையிலிருந்தால் அதற்கு ஆதரவாக வாக்களிக்காமல் நீதியைக் கொலை செய்யும் இந்நிகழ்ச்சியிற் பங்குபற்றாமல் இருந்து ஈழத் தமிழ் பேசும் மக்களின் உரிமைகளைக் காக்க உதவி செய்வீர்களாக.

இப்படிக்கு
'மதிஒளி'
மன்னார்.

### தமிழ்...

(3-ம் பக்கத் தொடர்ச்சி)

துறை ஆகியனவும் உள்ளனர் குறிப்பாகக் காங்கேசன் துறை அபிவிருத்தி செய்யப்பட்டால் தேவேந்திரமுனையும் (காலி) கொழும்பும் கொட்டாவி விடவேண்டி வரும் என்பதை எச்சரிக்கையுடன் அறுதியிட்டுக் கூறி வைக்க ஆசைப்படுகிறேன்:

சேனை சேர்த்துச் செந்தெல் செய்து ஆனைகட்டிப் போரடித்தவன் தமிழன்; மலையை மண்ணாக்கி இரத்தத்தை வியர்வையாக்கி வியர்வையைப் பசளையாக்கிப் பலதுறையிலும் வெற்றி கண்டவன் தமிழன்: இது சரித்திரம் கண்ட உண்மை;

எனவே தமிழ் மாநிலப் பொருளாதாரம் பற்றிக் கூறும் சகலருக்கும் வாயின் பதில் இதோ. புரியாவிட்டால் புரியவைக்க வியாத மேடை தொடராட்டும் பத்திரிகை வாயிலாக.

தணிக்கை..........

தாய்ப்பணி

'அன்னை யளித்தவுடல், அன்னை யளித்த வுயிர் அன்னை யருட்பணிக்கே யாம்.'

—யோகசித்தி.

மில்க்வைற் நீலசோப் மேலுறைகள் 15 அனுப்பி கவியோகி சுத்தானந்த பாரதியார் அவர்கள் அருளிய யோகசித்தி என்ற சிறந்த நூலைப் பெற்றுக் கொள்ளவும்.

மில்க் வைற் சோப் தொழிற்சாலை

த. பெ. இல. 77, — யாழ்ப்பாணம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நாவலர் சிறுகதை எழுதினரா?

"...இவர்களுக்கு இன்றும் மாபெரும் கவலையொன்று மனத்தை வாட்டுவதுண்டு. ஆறுமுகநாவலர் 'பெருமான்' அவர்களோ அல்லது சேர். பொன்னம்பலம் இராமநாதன் 'துரை' அவர்களோ ஒரு சிறுகதை—பெயருக்கென்ருலாவது ஒரேயொரு கதை எழுதவில்லையே என்று தாங்க முடியாத மனக் கவலை—நெஞ்சத்தை அரிப்பதுண்டு!

காரணம்—தங்களைத் தாங்களே சுயவிளம்பரம் பண்ணுதல்கள் இலக்கிய சாம்ராட்டுகளைத்திற்கு அதையொரு விளம்பர சாதனமாகப் பயன்படுத்தி இருக்கலா மல்லவா?

பாவம்!—அவர்கள் ஒரு சிறு கதை கூடச் சிருஷ்டிக்கவில்லையே!"

இந்த வாந்தியை டொமினிக் ஜீவா என்பவர் 'தண்ணீரும் கண்ணீரும்' என்ற சிறுகதைத் தொகுதி முன்னுரையில் கக்கியுள்ளமை பலருக்குத் தெரியாதிருக்கலாம். அதை இப்போது அறிபவர்களும் ஆச்சரியப்படமாட்டார்கள்;

இங்கு குறிப்பிட்டதுபோல 'பெருமான்' 'துரை' ஆகிய பதங்களுக்கு அடைப்புப் புள்ளிகள் இட்டு தனது கீழ்மையுள்ளத்தின் மதிப்பீட்டினுல் அவர்களைக் கீழ்மையாக டொமினிக் எழுதியுள்ளார்; ஆறுமுகநாவலர் பெருமானும், சேர். பொன்னம்பலம் இராமநாதனும் சிறுகதை எழுதவில்லை. என்று அவர்களைப் 'பாவம்' என்று குறிப்பிட்ட டொமினிக்கின் மிகமிக அற்பமான பாமர அறிவைப் பார்த்து இலக்கிய உலகம் 'பாவம்' என்று கணித்து வருகிறது;

மேற்கண்டவாறுதான் முன்பு எழுதியதைப் படித்தவர்கள் மறந்து விடுவார்கள் என்று அந்த டொமினிக் இன்று நடிக்க வெளிக்கிட்டமைதான் பலருக்கு ஆத்திரத்தை மூட்டுகின்றது.

ஆனந்த விகடன் மணியன் நாவலரைப் பற்றித் தனக்குத் தெரியாது என்று கூறியதற்குக் கொதித்தவராக நடித்து 'சவடால்' கட்டுரையொன்றை டொமினிக் தனது சஞ்சிகையில் எழுதினர். பத்திரிகையில் பணியாற்றும் தமிழரான மணியன் நாவலரைப்பற்றி அறியாதிருப்பது அவருக்கு இழுக்குத்தான்;

ஆனல் நாவலர் பிறந்து வாழ்ந்த மண்ணிலே பிறந்த டொமினிக் நாவலர் எழுதிய நூல்களின் பெயர்களையாவது அறிந்திருக்காவிட்டாலும் எழுத்தாளனுக

## இலக்கிய உலகு

### —"வேதாளம்"—

வெளிக்கிட்ட படியால் அவரின் தமிழ்ச் சேவை மாண்பினைக் கேள்விப்பட்டாவது தெரிந்திருக்கவேண்டும். இவையொன்றுமில்லாதவராக சிறிதளவு அறிவுகூட இல்லாதவராக பாமரத்தனமாக நாவலர் 'பெருமான்' அவர்களோ சேர். பொன்னம் பலம் இராமநாதன் 'துரை' அவர்களோ சிறுகதை எழுதவில்லையே! 'பாவம்' என்று கேட்டிருக்கிருர். தாம் நாட்டில் பிறந்த சான்ருேரை இப்படி இழிவுபடுத்திக்கணித்த டொமினிக்கின் வரண்ட அறிவைவிட, இழிந்த பண்பிலும் பார்க்க இந்தியாவில் பிறந்த மணியன் கூறியது மோசமானதல்ல, மணியன் நாவலரைப் பற்றித் தனக்குத்தெரியாதென்று மட்டும் கூறினர். நாவலர் பிரயாசைக்கட்டுரை எழுதினரா?

நாவல் எழுதினரா என்ற அறிவில்லாத வெருளிக் கேள்வி கேட்கவில்லை. இதனால் மணியனை இங்கு வாழ்த்துவதாக நினைக்கவேண்டாம்!

நாவலரைப்பற்றி அன்று இழித்துரைத்த அதே டொமினிக்தான் நாவலர் முத்திரை வெளியீட்டு விழாவிற்குத் தமிழரசார் போகாமைக்கு தாங்கிநது பக்கங்களில் தனது சஞ்சிகையில் ஆசிரியர் 'புராணம்' இறுக்கிஞர். 'தினபதி' எழுதிய கற்பனையைத் திருடியே அதையும் சரிக்கட்டினர்; தமிழரசுக் கட்சியின் தலைமைப் பீடத்திலுள்ளவர்கள் இறித்தவர்கள். எனவே தான் துவேஷ மனப்பான்மையால் சைவச்சான்ருேரான நாவலரின் முத்திரை வெளியீட்டு விழாவை அக்கட்சி பகிஷ்கரித்தது என்பதே தினபதியிடமிருந்து அவர் திருடிய கற்பனை!

நாவலர் 'பெருமான்' என்று நையாண்டி பண்ணி, நாவலர் சிறுகதை எழுதவில்லையே என்று அறிவிற்குப் புறம்பான கேள்வி கேட்டு ஆர்ப்பரித்த டொமினிக் இன்று நாவலர், நாவலர் என்று நடிக்கிருர்! காரணம்' இவரது சஞ்சிகைக்கு 'அனக்கும்' கோஷ்டி வட பகுதியில் இப்போது நாவலர் பெருமானது பெயரைக் கூறி 'கடை விரித்து' வருகிறது. அக்கோஷ்டிக்கு நன்றிக்கடனை இவர் தீர்த்து வருகிருர். நாவலரைப் புகழ்ந்து எழுதினல் தனது சஞ்சிகையைக் கொஞ்சப்பேராவது வாங்குவார்கள் என்பது பிறிதொரு நம்பிக்கை;

நாவலர் பெயரைச் சொல்லி கடை விரிப்பவர்களுக்கு ஒரு விடயத்தை வலியுறுத்த விரும்புகின்ருேம். நீங்கள் நாவலர் இலட்சியங்களை, நெறிகளை படித்து அறியவும் விரும்பவில்லை; அவைகளின்படி வாழவும் விரும்பவில்லை. சூனியவாதிகளாக சண்டாள மனத்துடன் அவரின் பெயரை உங்களது வியாபாரத்திற்குப் பயன்படுத்தக் கிளம்பியுள்ளீர்கள். மக்கள் விழிப்புடன்தான் இருக்கிருர்கள்! "நாவலர் அடி மட்டமான பிற்போக்குவாதி" என்று கூறிய எம்; கி. சுப்பிரமணியத்திற்கு வால்பிடிக்கும் டொமினிக் நாவலரை இப்போது தனது கொடுந்தமிழில் புகழ்வதேன்; நாவலர் ஏதாவது சிறுகதை எழுதியிருக்கிருரா என்று என்னை விடயமறியாத ஒரு குட்டி எழுத்தாளன் கேட்டே விட்டான்!

---

# சேவைநலம் பாராட்டு விழா

அ. இ. தமிழ் அரசு வாலிப முன்னணித் தலைவரும் மூதூர் நாடாளுமன்ற உறுப்பினருமாகிய திரு: அ. தங்கத்துரை அவர்களின் சேவையைப் பாராட்டி சம்பூர்வாழ் பொதுமக்கள் சம்பூர் தமிழ் அரசு வாலிப முன்னணி கிளையின் அனுசரணையுடன் சென்ற 26.2.72-ல் இங்கு ஓர் விழாவை கோலாகலமாக நடாத்தினர்.

இவ்விழா சம்பூர் த: அ: கட்சி கிளைத்தலைவர் திரு. வே. கோணமலை அவர்கள் மங்கல விளக்கேற்றிவைக்க விழாக்குழுத் தலைவரும் த: அ. வா. மு. கிளைத் தலைவருமாகிய திரு. சித்திரவேலாயுதம் வரவேற்புரை வழங்க சம்பூர் உள்ளூராட்சிமன்றத் தலைவர் திரு த. தாமோதரம்பிள்ளை அவர்களின் தலைமையில் விழா இடம்பெற்றன. இதில் வில்லிசை நிகழ்ச்சி சொற்பொழிவுகள் இன்னிசை விருந்து கவி அரங்கு நடனம், நாடகம் என்பன சிறப்பாக அமைந்தன.

இவ்விழாவில் பிரதம அதிதியாகக் கலந்துகொண்டு சிறப்புச் சொற்பொழிவாற்றிய நா. உ. திரு அ. தங்கத்துரை அவாகள் தமது பேச்சின்போது 'வரலாற்றுப் புகழ்வாய்ந்த முதன்மை மொழியாம் எமது தமிழ் மொழியை எவ்வாறு இந்நாட்டில் அழித்தொழித்திட திட்டமிட்ட சூழ்ச்சி நடைபெற்றுவருகிறது என்றும் புதிய அரசமைப்புச் சட்டத்தில், சிறுபான்மையினராகிய எமக்கிருந்த சிறிய பாதுகாப்புக் கூட புதிய திட்டத்தில் இடம் பெறவில்லை. இதனுல் எமது எதிர்காலம் இருள் சூழ்ந்ததாகவுள்ளது. ... ...

(தணிக்கை)

விழா ஆரம்பமாவதற்கு முன்னர் எமது நாடாளுமன்ற உறுப்பினர் அவர்கள் முதலில் சம்பூர் உள்ளூராட்சி மன்றத் தலைவர் த. வா. மு; தலைவர் ஆகியோரால் வரவேற்கப்பட்டு வீதியின் இருமருங்கிலும் பூரணகும்பங்கள் வைத்து மகரதோரணங்கள் வீதியை அலங்கரிக்க பொதுமக்கள் வரவேற்று, விழா மேடைக்கு அழைத்துச் செல்லப்பட்டார். இவ்விழா நிகழ்ச்சிகளைக் கண்டுகளிக்க மூதூர்த் தொகுதியின் பல கிராமங்களிலுமிருந்து ஏராளமான மக்கள் வந்திருந்தனர்;

அடுத்தநாட் காலையில் (27-2-72) சம்பூர் த: வா: மு. கிளையினரால் ஒழுங்கு செய்யப்பட்டிருந்த பொது கலந்துரையாடல் மகாநாடொன்றிலும் நா: உ: அவர்கள் கலந்துகொண்டு சம்பூரின் தேவைகளைக் கேட்டறிந்தார். இம்மகாநாட்டில சுமார் 75பேர் பிரதிநிதிகளாகக் கலந்து கொண்டனர்.

---

# கடலக பயிலுனர் தெரிவில் ஒரு தமிழரும் இல்லை!

கொழும்புத் துறைமுக அதிகாரசபையினுல் அண்மையில் தெரிவு செய்யப்பட்ட 15 கடலக பயிலுநர் பதவிகளில் ஒரு தமிழர் கூட தெரிவு செய்யப்படவில்லை. நூற்றுக்கணக்கான தமிழர்கள் விண்ணப்பித்தும் தமிழர் ஒருவர்கூட எடுபடவில்லை என்பது வேலை வாய்ப்பிழந்து தவிக்கும் தமிழ் இளைஞர்களின் நெஞ்சங்களில் வேல் அரசினர் பாய்ச்சிய நிகழ்ச்சியாகும்.

---

# கிளிநொச்சியில் சிங்கள மகாவித்தியாலயம்!

கிளிநொச்சியிலுள்ள தமிழ் பாடசாலைகளில் ஆசிரியர் பற்ருக்குறை, விஞ்ஞான ஆய்வு கூடங்கள் இல்லாமை போதிய வசதிகொண்ட மாவித்தியாலயங்கள் இல்லாமை, தளபாடங்கள் பற்ருக்குறை இப்படியாக பல குறைகள் இருக்கின்றன. தரமான கல்வியை குழந்தைச் செல்வங்களுக்கு ஊட்டவேண்டுமென, பரந்தன் வட்டக்கச்சி போன்ற இடங்களிலிருந்து மாணவர்கள் கிளிநொச்சிக்குக் கல்வி கற்பதற்காக வருகின்றனர். போதிய விஞ்ஞான, ஆங்கில சங்கீத ஆசிரியர்கள் தட்டுப்பாடு தொகுதி முழுவதும் நிலவுகின்றது; இங்குமட்டுமாவட, கிழக்கு மாகாணங்கள் மட்டுமல்ல இலங்கை பூராவிலுமுள்ள தமிழ் பாடசாலைகளிலும் இதே நிலைதான்; இதை சகல பெற்ருர்களும், தமிழ் அரசியல் வாதிகளும் ஏற்றுக் கொள்வார்கள்.

ஒரு பாடசாலையை மகாவித்தியாலயமாக்க எத்தனை சிரமப்படுகின்ருேம்; ஒரு பாடசாலையிலிருந்து அடுத்த பாடசாலைக்கு தூரம் கணிக்கப்படுகின்றது. மாணவர் சராசரி இப்படியாக எவ்வளவோ சட்டதிட்டங்களின் வாய்ப்பைப் பெற்று நாம் பெற்ற மாவித்தியாலயங்கள் பெயரளவில் மாவித்தியமாக இருக்கின்றது. மேலே குறிப்பிட்ட குறைகள் தமிழ் மாவித்தியாலயங்கள் அனைத்துக்கும் பொருந்துகின்றது.

இந்நிலையில் மாணவர்களே இல்லாமல் மகாவித்தியாலயம் கட்டப்படுகின்றது. கிளிநொச்சியில் மிகக் குறைந்த அளவு சிங்கள மாணவர்களே இருக்கின்ருர்கள். இம்மாணவர்களை விரல் விட்டு எண்ணிவிடலாம் அப்படி இருந்த போதிலும் கிளிநொச்சியில் மாவித்தியாலயம் ஆரம்பமாகிவிட்டது. கல்வி கற்கின்ற பிள்ளைகளை ஏற்றி இறக்குவதற்கு அரச வாகனங்கள் உபயோகிக்கப்படுகின்றது. வசதியற்ற ஏழைக் குடும்பங்களின் குழந்தைகள் என்றபோர்வையில் அரசியல் லாபம் கருதி நடைபெறும் இம்மாவித்தியாலயத்தின் சூத்திரதாரியாக கிளிநொச்சியில் பிரபல விம்பிளி விகாரையின் பிக்கு ஈடுபட்டிருக்கின்ருர்.

தமிழ் குழந்தைகளுக்கு சிங்களத்தைப் போதிப்பதில்

இம் மாவித்தியாலய சூத்திரதாரியான பிக்குவுக்குப் பக்கத்துணையாக கிளிநொச்சி பா. உ. விளங்கிவருகிருர்; தமிழ் குழந்தைகளுக்கு தமிழே போதனமொழியாக இருக்கவேண்டுமென தமிழரசுக் கட்சியினர், தமிழறிஞர்கள், பேராசிரியர்கள் கோருகிருர்கள்.

புதிய அரசியல் யாப்பு வரையப்படுகின்ற இந்நேரத்தில் மானமுள்ள எத் தமிழனும் இதை ஏற்க முடியுமா? தமிழ் மா வித்தியாலயங்களில் மாணவர்களினுடைய கல்வியைப்பெற சகல துறைகளிலும் பற்ருக்குறை நிலவுகிறது.

சிங்கள மாவித்தியாலயத்தில் மாணவர் பற்ருக்குறை மட்டுமே நிலவுகிறது. இனியாவது கிளிநொச்சித் தமிழர்கள் அரசியலில் விட்ட தவறை உணருவார்களா? நாம் விட்ட சிறிய தவறு இன்று என்ன ரூபத்தில் விசுவரூபமாகிவிட்டது!

வெட்கமில்லாமல் ஒரு தமிழ் பாராளுமன்ற உறுப்பினரிடத்தில் தமிழருக்கு எதிராக அரசியல் யாப்புக்கு வாக்களித்த... ... கள்.

—முத்து சுப்பிரமணியம்

---

# கொடுங் கோலருக்கு....

—இணுவையூர் இரகுபதி சிறீதரன்

தட்டிக் கேட்க ஆளில்லை என்று எம்தமிழை
வெட்டிப் போட முனைகிறீர்கள் — வீணர்களே!
எட்டி உதைப்போம் எழில் தமிழ் இனத்தைக்
கட்டிப்போட முனைந்தால்! — வீணே
முட்டி மோதாது எட்டப் போய்விடுங்கள்!
வெட்டிப் பேச்சுப் பேசி எம்முடன்
ஒட்டி உறவாடும் கேடு கெட்ட — சில
எட்டப்பர் கூட்டத்தின் கொட்டத்தை
விட்டுக்கொடுத்து இனியும் வீணே இரோம்!
கொட்டத்தினைத் தரை மட்டமாக மடக்கி
ஒட்டத்தட்டி அடக்கி இவர் நரிச்செயல்களைப்
புட்டுக் காட்டும் காலம் கிட்டிவிட்டது!
— உங்களை
ஒட்டி எச்சில் இலை நக்கும் உலுத்தரை
தட்டி விழுத்திச் சாக்காட்டிற்கு அனுப்பி—தேன்
கட்டிக் கரும்பாம் கன்னித்தமிழை
எட்டமுடியா எல்லையிலா உயரத்தில் — மனதில்
மட்டிலா மகிழ்ச்சியுடன் வைக்கும் நாள்
எட்டத்தில் இல்லை — கொடுங்கோலரே
திட்டம் வகுத்துவிட்டோம் தெரிகுவீரே!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குடியரசு அரசியல் சட்டத்தை ஆதரிக்காதே! கூறினர் மக்கள்! சீறினர் 'சிமோல்'!

21-2-72 அன்று மாலை அட்வக்கேட் இராஜ இராஜேஸ்வரன் தங்கராஜா வைத் தலைவராகக்கொண்ட தூதுக்குழு ஒன்று, நல்லூர் மக்கள் சார்பில் நல்லூர் நாடாளுமன்ற உறுப்பினர் அருளம்பலத்தை சந்தித்து "புதிய அரசியல் சட்டத்தை" பகிஷ்கரிக்குமாறு கேட்கச் சென்றது. இத்தூதுக் குழுவில் நாயன்மார்கட்டைச் சேர்ந்த கா. இரகுநாதன் அவர்களும் — வண்ணார் பண்ணை சி. அருமைரத்தினம் அவர்களும் இருந்தனர்; தூதுக்குழு சிமோல் அருளம்பலத்தை சந்தித்த சுவையானகாட்சியேஇது. அப்படியே தருகிறோம்.)

**சூழ்நிலை:** நல்லூர்த் தொகுதி பாராளுமன்ற உறுப்பினர் சிமோலின் வீட்டு முற்றத்தில் ஒரு மேசையைச் சுற்றி மூன்று நான்கு பேர் அமர்ந்திருந்தனர். சிமோல் உள்ளேயிருந்தார்; தூதுக் குழுவின் தலைவர் அவரது காரியாலயத்துள் சென்று சந்தித்தார்; அதன்பின் பேச்சுவார்த்தை ஆரம்பித்தது. பின் வரும் சம்பாஷணையின் இடையிற் குறுக்கிட்ட சனப்பிறவிகள் அப்படியே குறிப்பிடப்படுகிறார்கள்.

**தலைவர்:** ஐயா புதிய அரசியல் சட்டத்தை நீங்கள் எதிர்க்கவேண்டும் என்று தங்களைக் கேட்கும் இம்மகஜரை தங்கள் தொகுதி வாக்காளர்கள் சார்பில் தங்களிடம் சமர்ப்பிக்கின்றேன்; இதை நீங்கள் தயவு செய்து வாசித்துப்பார்க்க வேண்டும். இது உங்கள் தொகுதி மக்களின் விருப்பம் ஐயா!

**சிமோல்:** (மகஜரைப் பெற்றுக் கொள்கிறார். மேவான கண்ணோட்டத்தின் பின் ஏகவசனம் எடுத்த எடுப்பிலேயே பிரயோகிக்கப்படுகிறது) இதெல்லாம் எனக்கு வேண்டாம் கொண்டு போ...! இதை நீங்கள் சில தமிழரசுக் கட்சிக்காரர்தான் கேட்கிறீர்கள். இதைப் பிடி.... பிடி...'

**தலைவர்:** இல்லை ஐயா, இதை நீங்கள் வாசிக்கத்தான் வேண்டும். இதில் உங்கள் கட்சிக்காரர்களும் கையொப்பமிட்டிருக்கிறார்கள். உண்மையில் இது ஒரு கட்சிசார்பற்ற மகஜர்;

**சிமோல்:** இதையெல்லாம் நான் ஏற்றுக்கொள்ள முடியாது. இதைப் பிடி ...பிடி...

**தலைவர்:** (மகஜரைத் திருப்பிப் பெறுமலே) இல்லை நீங்கள் கட்டாயம் வாசிக்கத்தான் வேண்டும்; இதில் நல்லூர்த் தொகுதி வாக்காளர்கள் பலர் கையொப்பமிட்டிருக்கிறார்கள். இன்னும் ஆயிரக்கணக்கானவர்கள் இதே கருத்தைத்தான் எங்களிடம் சொல்கிறார்கள். தங்களிடமும் சொல்லத்தான் போகிறார்கள்.

**சிமோல்:** அவர்களைப் பற்றியெல்லாம் எனக்குக் கவலையில்லை. இவர்கள் சொல்லை நான் ஏற்க முடியாது. எனக்கென்றொரு கொமிட்டி (பின்னர்தான் தெரியவந்தது அது காங்கிரஸ் கமிட்டி அல்லவென்று) இருக்கிறது. அதன்படிதான் கேட்பேன் (மகஜரைத் தன் வீட்டு விறுந்தையில் போட்டுவிட்டு அவரது வீட்டு வெளி முற்றத்திற்கு வந்துகொண்டே) நீங்கள் எல்லாம் இவ்வளவு காலமும் எங்கே போயிருந்தீர்கள் இப்பத்தான் ஞானம் வந்ததோ?

**தலைவர்:** நீங்கள் இப்படிச் செய்வீர்களென்று உங்கள் தொகுதி வாக்காளர்கள் எதிர்பார்க்கவில்லை. ஆகவே அவர்கள்தான் உங்களை இப்போது அப்படிக் கேட்கிறார்கள். புதிய அரசியல் திட்டத்திற்கு ஒப்பமிட வேண்டாமென்று அவர்கள் எல்லோரும்தான் இப்போது கேட்கிறார்கள். (இச்சந்தர்ப்பத்தில் எம்.பி. கதிரையில் இருக்கிறார் அங்கு போடப்பட்டிருந்தகதிரைகள் நிரம்பிவிடுகின்றன; அக்கதிரைகளிலிருந்து சனப்பிறவியொன்றின் குறுக்கீடு)

**சனப்பிறவி (I):** What about some of us? (எங்களில் சிலரைப்பற்றி என்ன சொல்கிறீர்?) நாங்கள் மாலை 1-30 மணியிலிருந்து இதைத்தான் ஆலோசித்துக்கொண்டிருக்கிறோம்.

**தலைவர்:** ஐயாவைத் தொழில் ரீதியில் எனக்கு நன்றாகத் தெரியும். ஆனால் நீங்களெல்லாம் இப்போது அற்ப சலுகைகளுக்காக வந்தவர்கள்.

**சனப்பிறவி (I):** (துள்ளியெழுந்து) What nonsense you are speaking? (என்ன அர்த்தமில்லாமற் கதைக்கிறீர்?) அதை வாபஸ் பெறும்.

**சிமோல்:** அது சரி, நான் கேட்டதற்கு இந்தத் தமிழரசுக் கட்சிக்காரர் ஏதாவது மறுமொழி சொன்னார்களா? மூச்சு விடாமல் இருக்கிறார்களே!

**தலைவர்:** ஐயா, அவர்கள் பிரதமரிடம் ஏற்கனவே போய்வந்து விட்டார்கள்;

**சிமோல்:** இப்பொழுதும் கூட, அவர்கள் அருளம்பலம், பொன்னம்பலம் தலைமையில் சமஷ்டி தனிநாடு கோரிக்கைகளைத் தூர எறிந்துவிட்டுப் பிரதமரிடம் உரிமை கேட்பதற்கு வரத் தயாரா? அப்படி அவர்கள் தயாரானால் அவர்களிடமிருந்து ஒரு கடிதம் வாங்கி வர உம்மால் முடியுமா?

**தலைவர்:** ஐயா எவராயினும் தங்கள் தலைமையில் வருவதானால் முதலில் தமிழ் மக்களுக்குச் சம உரிமை இலங்கை முழுதும் கிடைக்கும் என்று உங்கள் பிரதமரிடமிருந்து ஒரு உறுதியான கடிதம் பெற்றுத்தருவீர்களா? அப்படியானால் நாங்கள் தமிழர் உரிமைகளுக்காகப் பாடுபடும் எந்தக் கட்சியையும், மற்றும் தனிப்பட்டோரையும் கூடத் தங்கள் தலைமையில் அழைத்து வரவேண்டிய ஒழுங்குகளைக் கவனிக்கத் தயார்.

**சிமோல்:** பிரதமருக்கு 100க்கு 80 வீதம் பெரும்பான்மை இருக்கிறது; அவருக்கு உங்கள் (தமிழர்களின்) உதவி தேவையில்லை.

**இரகுநாதன்:** உதவி தேவையில்லாவிடில் ஏன் ஐயா உதவியளிக்கிறீர்கள்.

**சிமோல்:** நான் இந்தக் குழுவின் வேண்டுகோளுக்கு இசைய முடியாது. (சூழவிருந்த சனப்பிறவிகளுள் இன்னொன்று குறுக்கிடுகிறது)

**சனப்பிறவி 2:** தம்பி, அவர்கள் மாப்பிள்ளை வீட்டுக்காரர்கள். நீங்கள் பெட்டைக் கூட்டம்: நீங்கள் தான் அவரிடம் போக வேண்டும்.

**தலைவர்:** நாங்கள் பெட்டைக் கூட்டம் இல்லை. எங்களுள்ளும் சில பேடிக் கூட்டமிருக்கிறதென்பது எங்களுக்கு நன்றாகத் தெரியும். (அதன் முகம் வெளுறுகிறது) (தலைவர் பா. உ. வை நோக்கி) ஆகவேதான் ஐயா, இவ்வாக்காளரின் கோரிக்கையை ஏற்காவிட்டால் இனத்தின் அழிவுக்கே வழிகோலுகிறீர்கள்:

**சிமோல்:** நீங்கள்தான் அழிந்து போவீர்கள்! (இச் சந்தர்ப்பத்தில் இரகுநாதன் குறுக்கிட்டார்.)

**இரகுநாதன்:** நீங்களே இப்படிச் சொல்வது கூடாது ஐயா. ஏனெனில் தமிழ் மக்களின் பிரதிநிதியாக இருக்கும் நீங்கள் அச்சொல்லை உபயோகிக்கவே கூடாது. இனத்துக்கு அழிவு செய்பவர்கள் அநீதி நடக்கப் பார்த்திருப்பவர்கள் அழிந்து விடுவார்கள் எனக்கூறுங்கள் (எம். பி; உருத்திர மூர்த்தியாகிறார்.)

**சிமோல்:** அது சரி, நீயார்?

**தலைவர்:** அவரும் ஒரு நல்லூர்த் தொகுதி வாக்காளர்தான்.

**இரகுநாதன்:** நீங்கள் இப்போது எங்கள் எல்லோருக்கும் பிரதிநிதிதான்:

**சிமோல்:** (கொதித் தெழுந்தார்) அப்படியில்லை! எனக்கு வாக்களித்தவர்களை எனது கொமிட்டிக்குத்தெரியும். அந்தக் கொமிட்டியின் சொற்படிதான் நடப்பேன்: நான் ஐந்து வருடம் தோற்று அழுதபோது இங்கு (முற்றத்தில்) நின்று அழுதாயா? நீங்களெல்லாம் எனக்கு வாக்களித்தவர்களா?

**இரகுநாதன்:** என்னையா, நீங்கள்: தெரிவு பெற்றதும் நானும், மற்றும் உங்களுக்கு வாக்களித்தவர்களும்; நாம் இன்னாருக்கு வாக்களித்தோமென்று எழுதி ஒட்டிக்கொண்டா திரிய வேண்டும்? (சந்தர்ப்பத்தை உணர்ந்து தலைவர் குறுக்கிடுகிறார்.)

**தலைவர்:** ஐயா, அநீதியான அக்கிரமம் வாய்ந்த சட்டதிட்டம் என்று வாக்காளர்களாகிய எங்களில் ஏகோபித்தபெரும்பான்மையினர் கருதும் மசோதாவை நீங்கள் யார் சார்பிலும், எந்த விதத்திலும் ஆதரிப்பீர்களேயானால் எங்களுக்கோ, எங்கள் வருங்காலச் சந்ததியினர்க்கோ, ஏற்படக்கூடிய சகல விபரீதங்களுக்கும் நீங்களே முழுப்பொறுப்பாளியாவீர்கள் என்பதை மட்டும் நினைவூட்டி வைப்பது எங்கள் கடமையாகும்;

**இரகுநாதன்:** ஐயா தமிழினத்தின் சார்பில் உங்களுக்கு ஒரு விண்ணப்பம்; தமிழ்ச் சந்ததியினரின் வாழ்வு உங்கள் கையில் தங்கியிருக்கிறது; உங்களை நம்பியவர்களுக்காக மகஜரை, ஆற அமர வாசித்து மனச்சாட்சியின் வழி, நீதியுடன் நடந்து கொள்ளுங்கள் வணக்கம் வருகிறோம். (கை குலுக்கி விடைபெறக் கையை நீட்டுகிறார். அவர் மறுத்து.)

**சிமோல்:** போ... போ... உங்கள் எல்லோரையும் எனக்குத் தெரியும்;

**இரகுநாதன்:** இதுவும் எமினத்தின் தலைவிதிதான்!

**அருமைரத்தினம்:** தெய்வத் தீர்ப்பே தமிழனுக்குத் துணையாக வேண்டும்; (தூதுக்குழு வெளியேறுகிறது.)

---

**அடுத்தவாரம்**

**அரசியல்**

**மடல்**

---

## தமிழன் தமிழனாக வாழத்.... காட்டிக்...

(5ம் பக்கத் தொடர்ச்சி)

றைக் கூட சிங்கள நாட்டிலிருந்து வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்வதை நீர் கேள்விப்படவில்லையா? இவை சிங்கள நாட்டிற்கு அந்நிய செலாவணியை ஈட்டிக்கொடுக்க முடியுமென்றால், தமிழ் மாநிலத்தின், புகையிலை, மாம்பழம், வாழைப்பழம் வாழைநார், பனம்பொருட்கள் போன்றவை நமது பொருளாதாரத்துக்கு உதவ மாட்டாவா?

மலையகத்தில் பூமிக்குமேல் பாய்ந்தோடும் நீரிருப்பது போல் தமிழ் மாநிலத்தில் பூமிக்கடியில் நீர்வளம் உண்டென்பதை நீர் அறியவில்லையா? தமிழ் மாநிலங்கள் வளமற்ற பயனற்ற பகுதிகளென்றால் சிங்கள மக்கள் இங்கு குடியேற ஆசைப்படுவானேன். வளமற்ற பகுதியில் வாழும் மக்களை எக்கேடாவது கெட்டுப் போங்களென்று விட்டுவிடாமல் எதற்காக அவர்களைக் கட்டியாளவேண்டும். வளம்கொழிக்கும் சிங்கள நாட்டிலிருந்து அவர்களை வளமுடன் வாழும்படி கூறுங்களேன்.

ஆங்கில ஆட்சியில் ஆங்கிலத்தைப் படித்து உத்தியோகம் பார்த்த காலம் மலையேறிவிட்டது. ஆங்கிலேயர் திறமைக்கு இடம்கொடுத்தார்கள் அதனால் தமிழர் உத்தியோகம் பெறமுடிந்தது. இன்று சிங்களம் படித்துத் தமிழர் உத்தியோகம் பெறமுடியுமா? சிங்களத்தைத் தாய்மொழியாகக் கொண்டவர்களுக்கே உத்தியோகம் இல்லாதிருக்கும் போது [illegible] இல்லாதிருந்து விட்டாலும், அதுமட்டுமா இன்று சிங்கள ஆட்சி உத்தியோகத்திற்கு ஆள் திரட்டும்போது திறமைக்கு மதிப்பளிக்காது இனத்திற்கும், மொழிக்கும், பிரதேசத்திற்கும் முதலிடம் கொடுப்பதை நீர் அறியீரா தோழரே!

### தணிக்கை........

நீர் அறியவில்லையா? தமிழனுக்கு ஏன் இந்நிலை ஏற்பட்டது. தமிழ் நாட்டில் எதுவுமில்லை. பிறநாடுகளில் தான் எல்லா வளங்களும் இருக்கின்றன. அங்கு சென்று மற்றவர்களுக்கு அடிமையாக இருந்தேனும் பொருள்தேடுவோம் என்ற நப்பாசையும், தன்மானமின்மையும், தன்னம்பிக்கையின்மையும் தான் தமிழனுடைய தாழ்விற்குக் காரணங்களாகும். எத்தனை காலத்திற்குப் பிறநாடுகளில் பிற மாநிலங்களில் தமிழன் உத்தியோகம் பார்க்கவும், வியாபாரம் செய்யவும் முடியும்.

ஆங்கிலேய ஆட்சியிருந்த காலத்தில் அவர்களுடைய அடிமைகளாக இருந்த தமிழரும், ஏனைய அடிமை நாடுகளுக்குச் சென்று எவ்வித கட்டுப்பாடுமின்றித் தொழில் புரிய முடிந்தது. ஆனால் இன்று காலம் மாறிவிட்டது. ஒவ்வொரு இனமும் சுதந்திர இனமாகத் தனிநாடோடு வாழத் தொடங்கி விட்டது. தனது நாடு தமக்கே சொந்தமென்று உரிமை பாராட்டுகின்றது. ஆனால் தமிழன்மட்டும் இன்னும் அடிமை நிலையி...

(6ம் பக்கத் தொடர்ச்சி)

நபரின் தொகுதியில் இடம் பெற்ற ஐந்து நியமனங்களையும் சுட்டிக்காட்டி அவற்றை யாவது ரத்துச் செய்யும்படி கேட்டுக் கொள்ளவே அதிகாரியும் பணிந்து விட்டாராம்; பலன் இக்கன்னிகள் இவருள் நால்வர் காட்டுப் பிரதேசத்திற்கும் ஒருவர் கடல் கடந்த தீவு ஒன்றிற்கும் நியமனம் பெற்ற முதல் நாளே இடமாற்றம் செய்யப்பட்டனர்;

கடலையும், காட்டையும் கடந்து செல்லும் துர்ப்பாக்கிய நிலைக்குள்ளான இக்கன்னிகளின் அவலத்தைக் காணும் இதயம் படைத்த ஒவ்வொருவரும் இக்காட்டிக் கொடுத்த கருங்காலிகளின் தியாகத்தையும் பதத்தையும் கண்டு கண் கலங்கின்றனர்.

(அளவை சிவன்)

---

விருந்து விழித்தெழாமல், இலங்கையிலுள்ள தமிழச் சிங்கள மாநிலங்களிலும், இந்தியாவிலுள்ள தமிழச் ஏனைய மாநிலங்களிலும் தொழில் புரியவே விரும்புகின்றனர்; தமக்கென உரிய மாநிலத்தில் பெரும்பான்மையாக வாழ்ந்து வளத்தைப் பெருக்கி இனத்தையும், மொழியையும், பண்பாட்டையும் பேணிக் காப்பாற்றுது பல மாநிலங்களிலும் சிதறிச் சிறுபான்மையினமாக, தமக்கென உரிய மாநிலத்தையும், மொழியையும், பண்பாட்டையும், சுதந்திரத்தையும் இழந்தபின் தானா? தமிழனுக்கு உணர்வு வரும்.

([illegible])

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தலைமைத் தபால் நிலையத்தில் செய்திப் பத்திரிகையாகப் பதிவு செய்யப்பட்டது


நாலாவது ஜனத்திரள் வாரம்

கெப்பிட்டல்
(கொழும்பு)
பிளாசா
(வெள்ளவத்தை)
வெலிங்டன்
(யாழ்நகர்)

எம். ஜி. ஆர்.
பத்மினி
மஞ்சுளா
— நடித்த —



ரிக்ஷாக்காரன்

(ஈஸ்மன் கலர்) இசை: எம். எஸ். விஸ்வநாதன்

இப்பொழுது
காட்சியளிக்கிறது
— கிங்ஸ்லி —
(கொழும்பு)

சிவாஜி
சௌகார்ஜானகி
நம்பியார்
எஸ். வி. சுப்பையா
— நடித்த —



காவல் தெய்வம்

சிலோன் என்டடெடயின்ஸ்மென்ட்ஸ்சாரின் திரைகளில் காட்சியளிக்கின்றது



12வது வெற்றி வாரம்

சென்ட்ரல் (மருதானை) ராணி (யாழ்நகர்)

நடிகர் திலகத்தின் 150வது வெற்றிச் சித்திரம்
சிவாஜி, ஜெயலலிதா, நாகேஷ், நம்பியார்
விஜயகுமாரி, முத்துராமன், டி.கே.பகவதி
வி. எஸ். ராகவன் நடிக்கும்

(ஈஸ்மன் கலர்) சவாலே சமாளி

சிலோன் தியேட்டடஸ்சாரின் திரைகளில் காட்சியளிக்கின்றது

செல்லமகால் (கொட்டாஞ்சேனை) இம்பீரியல் (மட்டுநகர்) வின்சர் (யாழ்நகர்)

ஜெய்சங்கர் ரவிச்சந்திரன்
மற்றும் பலர் நடித்த

நான்கு சுவர்கள்

(ஈஸ்ட்மன் கலர்) கதை—வசனம்—டைரக்ஷன்:— கே. பாலசந்தர்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை இலங்கை நியூஸ்பேப்பர்ஸ் லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் கொழும்பு பண்டாரநாயக்க வீதி, 194 ஆம் இலக்கத்தில் 1972-ம் வருடம் பெப்ரவரி மாதம் 12-ம் திகதி ஞாயிற்றுக்கிழமை அச்சிட்டு பிரசுரிக்கப்பட்டது —ஆசிரியர் சோமலை மகேசன்